1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்கரவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு மாசி மாதம் 24-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 8-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### கற்றவாலிபருக்குக் காணிகள்

கல்விகற்றுவிட்டு வேலையற்றிருக்கும் வாலிபர்களைக் குடியேற்றுதற்கான காணித்திட்டமொன்றைக் கிளிநொச்சியில்வகுக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. எஸ். எஸ். சி. வகுப்பில் சித்தியடைந்தவர்களும், கமப்பாடசாலைகளில் பயிற்சிபெற்று அரங்கேறியவர்களுமான சுமார் 300 மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் கிளிநொச்சியில் குடியேற்றப்படுவார்கள். இத்திட்டத்திற்கான விபரங்களை வடமாகாண அரசாங்கஏசன்றர் தயாரித்துவருகின்றார். கல்விகற்றவாலிபர்கள் கமத்தொழிலை மேற்கொள்வதற்கென்று அரசாங்கம் வகுக்கவிருக்கும் அநேகதிட்டங்களில் இதுவே முதலாவதாகும்.

### முந்தியவீதமான சோத்துவரியே

யாழ்ப்பாணநகரசபையின் மாதாந்த கூட்டம் சென்ற 11-ந் திகதி வெள்ளிக்கிழமை நடந்தேறியபோது, அதில் 1954-ம் ஆண்டு நடைமுறையிலிருந்த சொத்துவரி (சோலைவரி) விகிதமே இந்தஆண்டிலும் நடைமுறையில் இருந்துவரவேண்டுமெனத் தீர்மானிக்கப்படலாயிற்று. இதுவிஷயமாய்க் கொண்டுவரப்பட்ட பிரேரணை அங்கத்தவர்களின் சம்மதவாக்குக்கு விடப்பட்டபோது, அவர்களில் ஐந்துபேர் ஆங்கிருக்கவில்லை. எஞ்சியவர்களில் பிரேரணைக்குச்சாதகமாக ஏழுபேரும் மாறாக இரண்டுபேரும் சம்மதவாக்களித்தார்கள். மேயர் வாக்களிக்கவில்லை.

### காங்கேசன்துறைத் துறைமுகம்

வடமாகாணத்திலே காங்கேசன்துறைத் துறைமுகத்தை வர்த்தகத்துக்கும், போக்குவரத்துக்கும் பயன்படுத்த அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இத்திட்டத்திற்கான அமைப்புப்படங்களையும், செலவுமதிப்புகளையும் தயாரிப்பதற்கென்று ஆலோசனை எஞ்ஜினியர்கள் கம்மிற்றியொன்றின் சேவையைப் பெறுவதற்கான ஏற்பாடு செய்யப்படுகிறது. போக்குவரத்து – நீதிமந்திரிமாரின் பாராளுமன்ற காரியதரிசியான திரு. வி. குமாரசாமி அவர்களும், தபால்-வானொலி மந்திரியாரான திரு. எஸ். நடேசன் அவர்களும் போக்குவரத்து மந்திரியாருக்குச் சமர்ப்பித்துள்ள இருமனுக்களைத்தொடர்ந்தே இந்தமுடிவு செய்யப்பட்டிருக்கிறது. வடபகுதியில் ஓர் துறைமுகத்தைத் திருத்திவளப்படுத்தும் விஷயமாய் அரசாங்கம்சிலகாலமாகக் கவனஞ்செலுத்திவரலாயிற்று. ஆனால், காங்கேசன்துறைத் துறைமுகத்தை வளப்படுத்துவதா, அன்றேல் ஊர்காவற்றுறைத் துறைமுகத்தை வளப்படுத்துவதா என்பதே பிரச்சினையாயிருந்தது. எனினும் காங்கேசன்துறையை வளப்படுத்துவதே சிக்கனமும், இலாபமுமெனக் கண்டறியப்பட்டது.

### நாற்பதினாயிரம்ரூபா நஷ்டஈடு

நீர்கொழும்பிலே 1952-ம் ஆண்டு மாசி 16-ந் திகதியன்று ஓர்மாணவியான எஸ். டி. ஜோர்சியானு எனும் இளம்பெண் தனது சகோதரரோடு காரொன்றில் சென்றுகொண்டிருக்கையில் லொறியொன்று பின்னால்சென்று காரில்மோதியதால் விபத்து ஏற்பட்டது. அதனால் அந்தஇளம்பெண் தனதுவலதுகையை இழந்துவிட்டாள். ஆகவே, லொறியின் சொந்தக்காரரான நீர்கொழும்பைச்சேர்ந்த திரு. பி. ஏ. பெறேருஎன்பவர்மீதும், லொறிச்சாரதியான கே. எல். லோறிஸ் பெறேரு மீதும் அறுபதினாயிரம் ரூபா நஷ்டஈடும், 1,251 வைத்தியசெலவுங்கோரி நீர்கொழும்பு டிஸ்திறிக்கோட்டில் தொடர்ந்தவழக்குவிசாரணை சென்ற 16-ந் திகதிமுடிந்து, நாற்பதினாயிரம் ரூபா நஷ்டஈடுகொடுக்கும்படி தீர்ப்பாயிற்று.

### மானிப்பாய் மிஷன்ஆஸ்பத்திரி

மானிப்பாயிலுள்ள கிறீன் ஞாபக மிஷன் ஆஸ்பத்திரியிலே வைத்திய தொண்டு ஆற்றுவதற்கென இருடக்றர்மார் புதிதாக நியமனம்பெற்று வந்திருக்கிறார்களென அறிகின்றோம். இவர்களில் டக்றர் டபிள்யு. கே. நாயுடு, எவ். ஆர். சி. எஸ். அவர்கள் டபிளின் நகரிலே சத்திரவைத்தியபட்டம் பெற்றிருப்பதுதவிர, பேர்ளின்நகரிலே ஒருவருடகாலமும், வீயென்னு நகரில் ஆறுமாதங்கள்வரையிலும் சத்திர வைத்தியஞ் செய்திருக்கின்றார். இவர் இந்திய அரசாங்கத்தின்கீழ் வைத்திய கடமை ஆற்றிவந்து, பிந்தச் சென்னை நகரிலுள்ள ஸ்ரான்லிவைத்தியகல்லூரியிலே ஐந்துவருடகாலம் சத்திரவைத்திய போதகாசிரியராயிருந்து வாலாயினார். இவர்சென்னைக்கவர்னர் ஸ்ரீபிரகாசா அவர்களுக்குச் சத்திரவைத்தியராகச்சேவைசெய்துகண்ணியம்பெற்றவர். மற்றடக்றரான ஸ்ரீமதி மேர்ஸி சத்தியா, எம். பி., பி. எஸ். அவர்கள் சென்னையிலுள்ள கல்யாணி மிஷன் ஆஸ்பத்திரியில் பிரசவ சத்திரவைத்தியராகக் கடமைபார்த்துவந்தவர். இவர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் கடமைபார்க்குமாறு அங்கிருந்து விசேஷவிதமாக விடுவிக்கப்பெற்று வந்திருக்கிறார்.

### றெயின்தங்கும் புதியநிலையம்

கந்தளாய்க்கும், தம்பலகாமத்துக்குமிடையிலுள்ளபகுதியிலே 850 பேருக்கு மேற்பட்ட குடியேற்றகாரர் தற்போது வசித்துவருகின்றனர். இவ்வருடத்தில் மேலும் அநேக குடும்பங்கள் அங்கு கொண்டுபோய்க் குடியேற்றப்படவிருக்கின்றன. தற்சமயம் அப்பகுதியில் வசிக்கிறவர்கள் றெயினில் பயணஞ்செய்வதாயிருந்தால்ஏழுமைலுக்கு அப்பாலுள்ள தம்பலகாமத்துக்கோ, அன்றேல் கந்தளாய்க்கோ கால்நடையில்தான் செல்லவேண்டும். அதனால் சனங்கள் பெரிதுங் கஷ்டப்படுகிறார்களென்று மூதூர்ப்பிரதிநிதி ஜனாப் எம். ஈ. எச். முகமத் அலி அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரிலே முன்சொன்ன இருஇடங்களுக்குமிடையே றெயின் தங்கும்நிலையமொன்றை அமைப்பதென றெயில்வே அதிகாரிகள் முடிவுசெய்திருக்கின்றார்கள்.

### முதலாவது மரணதண்டனை

ஒட்டுமடத்திலே வேலன் செல்லன் என்பவன் தனதுமனைவியான சின்னப்பிள்ளையைச் சென்றவருடம் ஆவணி மாதம் 5-ந்திகதியன்று கத்தியால்வெட்டிக் கொலைசெய்தானென்று குற்றம் பாரித்துத் தொடரப்பட்டிருந்தவழக்கு யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணைக்குள்ளாய் எதிரிகுற்றவாளியென்று யூரிமார்தீர்த்தமையால் மரணதண்டனை விதிக்கப்பட்டான். இம்முறைச் சுப்பிறீங்கோட்டில் விதிக்கப்பட்ட முதல்மரணதண்டனை இதுவாகும்.

### பர்மா, தாய்லாந்து அரிசி

உணவு-கமத்தொழில் மந்திரிகாரியாலய நிரந்தரக் காரியதரிசியான திரு. கே. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் பர்மா, தாய்லாந்து ஆகியநாடுகளுடன் நடத்தியுள்ள பேச்சுவார்த்தைகளின் பயனாக நிகழும் 1955-ம்ஆண்டுக்குத் தேவைப்படும் அரிசியை இலங்கை சென்றவருடத்திலும் அதிகம்குறைந்த விலையில் பெறவிருக்கிறது. தொன் ஒன்று 42 பவுண்விலையில் இரண்டுலட்சம் தொன் அரிசி இவ்வருடத்திலே இலங்கைக்குக் கிடைக்கும். இதுசென்ற வருட விலையிலும் 8 பவுண் குறைவானது. இன்னும் தொன்ஒன்று 37 பவுண் 10 சிலின்விலையில் தாய்லாந்திடமிருந்து பதின்மூவாயிரம் தொன் அரிசி இலங்கைக்குக் கிடைக்கவிருக்கிறது. இம்மாதக்கடைசியில் தாய்லாந்து அரிசி இலங்கைவந்துசேரும். அதேகாலத்தில் பர்மாவும் தனது அரிசியை இங்கு அனுப்பிவைக்கத் தொடங்கும்.

### கண்டிக்குப் பஸ்சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்குப் பஸ்போக்குவரத்து நடத்துவதற்கென வடஓம்னிபஸ் கம்பெனிக்குப் பாதைலைசென்ஸ் புதிதாக வழங்கப்பட்டிருக்கிறது. வருகிற பங்குனிமாதமுதல் இந்தப் பஸ்சேவை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

### அரசர்களின் உருவச்சிலைகள்

கழுத்துறைப்பட்டினத்திலே இருந்துவருகின்ற ஐந்தாம் ஜோர்ஜ் அரசரின் உருவச்சிலையையும், ஏழாம்எட்வாட் அரசரின் மார்பளவான உருவச்சிலையையும் அந்தந்த இடங்களிலிருந்து அகற்றிவிட வேண்டுமென அப்பட்டினசங்கத்தின் சென்ற 19-ந் திகதிக் கூட்டத்தில் ஓர்பிரேரணை அரங்கேறியிருக்கிறது. இந்த உருவச்சிலைகள் முறையே அங்கு பட்டினமைதானத்திலும், பட்டின மண்டபத்திலும் இருந்துவருகின்றன. இந்த உருவச்சிலைகளை அகற்றிக்கொண்டுபோய் நூதனபொருட்காட்சிச்சாலையில் வைக்கவேண்டுமென அப்பிரேரணையைக் கொண்டுவந்தவர் கூறினார். பிரித்தானிய ஏகாதிபத்திய அரசாங்கத்தினிடமிருந்து கௌரவப்பட்டங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனேயே அவற்றை நன்கொடைகளாக உபகரித்தவர்கள் பட்டினத்துக்கு உபகரித்தார்கள்; கிறீஸ்தவர்களுக்கென்று மாத்திரமே குறிக்கப்பட்ட நைற்பட்டத்தைப் புத்தசமயிகள் ஏற்றுக்கொள்ளப்படாதென்று அப்பிரேரணையை ஆதரித்த திரு. டி. பீற்றர் சில்வா கூறினார்.

### சர்வகலாசாலைச் சிற்றாலயம்

பேராதனையிலுள்ள இலங்கைச் சர்வகலாசாலையைச்சேர்ந்த கத்தோலிக்க பேராசிரியர் – மாணவர் சமூகத்துக்குச் சென்ற 21-ந்திகதி திங்கட்கிழமை மிக விசேஷப்பட்ட ஓர்தினமாகும். ஏனெனில், இலங்கையிலுள்ள அதிமேற்றிராணியார், மேற்றிராணிமார்களின் ஆதரவிலே நவமாக அமைக்கப்பட்ட சர்வகலாசாலைக் கத்தோலிக்கசிற்றாலயமும், குருவர்மனையும் அன்று கொழும்பு அதிமேற்றிராணியாரான மகாமேன்மைதங்கிய தோமஸ் கூறே ஆண்டவரால் கண்டிமேற்றிராணியாரான மகாவந். டி. பேர்ணுட் றெஞ்ஞோ ஆண்டவர்சமேதராய் ஆசீர்வதிக்கப்படலாயின. திவ்வியபூசையின்பின் அதிமேற்றிராணியார் அங்குசமுகமளித்திருந்தவர்களின் கூட்டத்தில் பேசியபோது: சமயவழிபாட்டுச் சுதந்திரம் இருந்தால், நமக்குக் கோயில்கள் தேவைப்படும் இடங்களில் அவற்றைக்கட்டுவதற்கும் சுதந்திரம் இருக்கவேண்டுமெனக் கூறலாயினர்.

### சாவகச்சேரிக் கொலைவழக்கு

சாவகச்சேரியிலே சென்றவருடம் புரட்டாசிமாதம் 27-ந் திகதியன்று எம். வீரசிங்கம்எனும்ஒருவன் கணபதிப்பிள்ளை யோகரத்தினத்தைக் கத்தியாற்குத்திக் கொலைசெய்தானெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கு யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டிலே விசாரணைசெய்யப்பெற்று, யூரிமார் கைபிழைபாட்டுக் கொலையெனத் தீர்ப்பளித்தமையால் எதிரி பத்துவருடக் கடுஞ்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனன்.

### ஆனிமாதச் சூரியகிரகணம்

இலங்கையிலே வருகிறஆனிமாதம் தோற்றவிருக்கும் சூரியகிரகணத்தை அவதானிப்பதற்கென்று கிழக்குஜேர்மனியைச்சேர்ந்த இரு ஜேர்மன்விஞ்ஞானிகள் ஸ்கொத்லாந்திலுள்ள சென் அன்ட்றூஸ் வானமண்டல அவதானநிலையப் புரொபெசர் ஈ. எவ். பிறெயண்ட்லிச் அவர்கள் இலங்கைக்குவர ஒழுங்குபடுத்தும் ஆராய்ச்சிக்கோஷ்டியுடன்கலந்துகொள்ளவிருப்பதாகப்பேர்லின் நகரிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. இவர்கள் கிழக்குஜேர்மனியில் செய்யப்பட்ட ஓர் விசேஷ கமறு கொண்டு ஒளியின் ஆகருஷ்ண சக்திக் குரிய விசலனத்தை இரண்டாம்முறையாக அளக்கமுயற்சிப்பார்களாம்.

### கம்யூனிஸ்தர்கள் வந்தால்!

பசறையைச்சேர்ந்த பிபிலெகாம எனுமிடத்திலே 46,000 ரூபாசெலவில் கட்டப்பெற்ற புதியமருந்துச்சாலை ஒன்றைச் சுகாதாரமந்திரியார் திரு. ஈ. ஏ. நுகவெல அவர்கள் சென்றசனிக்கிழமை திறந்துவைத்துப் பேசியபோது: பாராளுமன்ற அங்கத்தவர்கள் பொதுசனங்களின் ஊழியர்கள்; அதனால் அவர்கள் பூமாலைகளை அல்ல, ஆனால், நல்லமனதையே வேண்டுகிறார்கள்; கம்யூனிஸ்தர்கள் அதிகாரத்துக்கு வந்தால் சமயசுதந்திரம் என்பது ஏனைய கம்யூனிஸ்த நாடுகளிற் போன்று இழந்துபோகப்படும் எனக் கூறலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கானின் ஒரேசெல்வம்

— பெப்பின், B. A. —

"வத்திக்கான் நகரிலுள்ள அத்தனை பெருஞ்செல்வங்களிலும் சிறந்தசெல்வம் யாது?"

இதைக் கேட்பது நம்மைப் பார்த்தல்ல, ஆனால், அகில உலகிலுமுள்ள ஆண்டவனின்சமயம் திருச்சபையின் தலைவராகஇருந்த 9-ம் பத்திநாத பாப்பானவரிடமே இதைக் கேட்கின்றது. நம்மைமாத்திரம் கேட்டிருந்தால் — மாபெரும் மண்டபங்கள்! வானளாவிய கோபுரம்! அதன்உச்சியிலே உள்ள சிலுவை! பல்லாயிரக்கணக்கான தூண்கள்கொண்ட மன்றங்கள்! கலையின் எடுத்துக்காட்டான சிற்ப ஓவியங்கள்! சரித்திரத்தின் ஏட்டிலே கலைக்குஎன ஒதுக்கப்பட்ட பக்கத்தில் முதல்இடம் வகிக்கும் மாபெரும் ஓவியன் லியோனார்டோ டாவின்சிபோன்ற அமரர்கள் தீட்டிய அழியாதஓவியங்கள் — இவற்றில் எதைக்குறிப்பிடுவதுஎனத் திகைத்திருப்போம ஆனால், வத்திக்கானின "வணங்காமுடி" மன்னன் — அங்குள்ளசெல்வங்களை அறிந்தவர்மட்டும் அல்ல, அதிபதியாக இருந்தவருமான 9-ம் பத்திநாதபாப்பானவர் தயங்காது கூறினார், "வத்திக்கானின் ஒரேசிறந்த செல்வம் செபமாலை" என்று. செபமாலையா? 53 மணிகளைக்கொண்ட அந்தச்செபமாலையா எனத் திகைக்கலாம நாம்—ஆனால், பாப்பாசர் பகர்ந்திருக்கிறாரே! காரணமில்லாமலா கர்த்தனின்பிரதிநிதி கூறியிருப்பார்? காரணங்கள் அனந்தம்உண்டு. ஒன்றிரண்டு கேளுங்கள்!

செபமாலை சொல்லும்பொழுது மாமரியின்வாழ்வை நம் அகக்கணணில் காண்கிறோம். இறைவன் அவளது திருஉதரத்தில் அவதரிக்கப் போகிறார் என்ற மங்களகரமான செய்தியிலிருந்து இறைவனைஈன்று, காத்து வளர்த்ததின் பலனாக மோட்சத்தையடைந்து, பரலோகபூலோகஅரசியாக முடிசூட்டப்பட்டதுவரை நாம்காண்கிறோம. இன்பம்என்ற படியிலே தொடங்கி, துன்பம்என்ற வாசலைக் கடந்து, மகிமைப்பிரதாபத்துடன் அவள் மோட்சத்தையடைந்த வாலாற்றை அது நமக்குநினைப்பூட்டுகிறது.

மேலும், செபமாலை மாமரியின்மனதிற்கு விருப்பமான வாடாமாலை. பாத்திமாநகரில் பாலர்மூவருக்குக் காட்சியளித்தகாலை: "எப்பொழுதும் செபியுங்கள் — செபமாலைசெபியுங்கள்" என்ற வேண்டுகோளை விடுத்தாள் அன்னை. பூங்காவனத்தில் இறைவன் தமதுசீடர்களைப்பார்த்துச் சொன்னார்: "விழித்திருந்து செபம்செய்யுங்கள் — எப்பொழுதும் செபியுங்கள்" என்றார். அன்னையோ செபமாலை செபியுங்கள் என்கிறாள். ஏன்? செபமாலையே ஒருசிறந்த செபமென்ற காரணத்தால். இறைவன் இல்லையென இறுமாப்புடன்கூறி, "ஆண்டவனின் அடிவருடிக"ளான கத்தோலிக்கரை இம்சிக்கும்ருஷியா நல்லவிதமாக யேசுவின் பாதத்தில்வர ஒரே ஆயுதம்—செபமாலை சொல்வதுதான.

செபமாலை சொல்லும்பொழுது, கத்தோலிக்கதிருச்சபையின் சத்தியங்களையும், மெய்மறையின் இனிமையான இருசெபங்களையும் (பரமண்டலமந்திரம், பிரியதத்தமந்திரம்) கூறுகிறோம். நமது கத்தோலிக்கதிருச்சபை விசுவாசத்தின் அடிப்படையில் கட்டப்பட்டது — விசுவாசத்தை விடாது உறுதியுடன் காக்கவேண்டும்—இதைத்தான் செபமாலைசொல்லும்பொழுது நாம் கூறிடும் "விசுவாசமந்திரம்" நினைப்பூட்டுகிறது. "ஆண்டவரே எங்களுக்குச் செபிக்கக் கற்றுத்தாரும்" எனக் கேட்டபொழுது, இறைவன்படிப்பித்த இணையற்றமந்திரம் — "பரமண்டலமந்திரம்." இறைவன் நம்பிதா. அவரே நம்மைக்காக்கின்றார்— நமதுஅனறுட உணவளிக்கிறார். வானத்தில் வட்டமிடும் வானம்பாடிக்கும், கல்லினுள் தேரைக்கும், கருப்பைஉயிருக்கும் உணவளிக்கும்தேவன் நம்மையும் காக்கின்றார்என்பதை நினைப்பூட்டுகிறது. 'பிரியதத்த'மந்திரம் நாம் மரியன்னைக்குச்சாற்றும் புகழ்மாலை. அன்னை ரிவரப்பிரசாதத்தின கால்வாய்என்பதை நினைப்பூட்டி, மரணவேளையிலும் எங்களைக்கைவிடாதேயும் அன்னையே என அவளை இறைஞ்சி மன்றாடுகிறோம். பிதாவுக்கும், சுதனுக்கும், இஸ்பிரீத்து சாந்துவுக்கும் ஸ்தோத்திரமுண்டாகக் கடவது எனப்போற்றுவதும் செபமாலையில்உண்டு. ஆகவே, செபமாலையில் பொறுக்கிய மணிகள்போன்ற செபத்தைச்சொல்லி மரியாயை வாழ்த்துகிறோம்.

இதனால்தான் அநேக புனிதர்கள் செபமாலையைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள். "திவ்விய பூசைப்பலிக்குப் பின் சிறந்தசெபம் செபமாலை" எனப் புனிததொமினிக்கும், "செபிப்பதில் சிறந்த — சுருக்கமான வழி — செபமாலை — ஆனால், ஒழுங்காகச் செபிக்கவேண்டும்" எனப் புனித பிரான்சீஸ் சலேசியாரும், கூடிச்செபித்திடும் குடும்பம் குலையாதுநிற்கும காணீர்" என அகிலஉலகம்புகழ் பெய்ற்றன் அடிகளாரும் கூறியுள்ளார்கள். மேலும் செபமாலைசெபிப்பவர்களுக்குக் கன்னிமரியாய் வரங்கள்பல அருளியுள்ளாள்.

முன்னொருநாள் யேசுநாதர் பன்னிருவயதில் காணாமல்போய்விட்டார். யேசுவைக்காணக் கன்னிமரியாய் கடைவீதிக்கோ, சினிமாச்சாலைக்கோ செல்லவில்லை — ஆனால், கோயிலுக்கே சென்றாள். அதுபோல யேசுவிடமிருந்து தூரவிலகிச் சென்றவர்கள் — மனதில் சாந்தியில்லாதவர்கள்— இறைவனைத் துறந்தவர்கள்— திரும்ப இறைவனைக் காணப் பொதுமேடைக்கோ, மகாநாடுகளுக்கோ செல்லவேண்டியதில்லை. பகுத்தறிவுப் பாசறைக்குள் போனாலும் பகவானைப்பார்க்க இயலாது. ஆகவே, திரும்ப யேசுவைக் கண்டடைய ஆலயம்செல்லவேண்டும். எப்படி மரியன்னை யேசுவைத் தேடி அலைந்தாளோ, அதுபோல நாமும் இறைவனைத் தேடவேண்டும் — "தேடுங்கள் கண்டடைவீர்கள்" என அவரேகூறியுள்ளார். மேலும் இறைவனை அடையச் சிறந்தமார்க்கம் மாமரியைத்தவிர வேறுயாருமல்ல. அதிகாரியொருவரைப் பார்க்கச்சென்றால், அவரது அன்னைமூலம்செல்வது அதிக பயன் தருமன்றோ! அதுபோல யேசுவிடம்செல்ல மரியாயின் துணைவேண்டும். மரியாயைத்துதிக்கச் சிறந்தவழி செபமாலை. ஆகவே, மனுக்குலம்முழுவதும் குடும்பசெபமாலைத் திட்டத்தைக் கைக்கொண்டு, ஆளுக்கொரு செபமாலை, நாளுக்கொரு செபமாலை சொன்னால் நிச்சயமாக இறைவன் ஆசி நமக்குஉண்டு. திருச்சபையின் திரவியமான செபமாலை வாழ்க!

— வே. க. குரலொலி

---

● ஒன்பதாம்பத்திநாத பாப்பானவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுதற்கான விசாரணைபற்றித் திருச்சடங்காசார திருச்சங்கம் இந்தமாசி மாதத்தில் கலந்துவிவாதிக்கத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தவிசாரணை சென்றமார்கழியிலே சம்பிரதாயமுறைப்படி சமர்ப்பிக்கப்படலாயிற்று.

● இற்றைக்கு இருபதுவருடங்களின்முன் ஜப்பான்தேசத்தில் ஒருலட்சம் கத்தோலிக்கரே இருந்தனர், ஆனால், இன்று 20 லட்சம்கத்தோலிக்கர் இருந்துவருகின்றனர். கடந்தஇருபதுவருடங்களிலும் ஜப்பானின்சனத்தொகை இருமடங்காக அதிகரிக்க, அங்குகத்தோலிக்[...] இருபதுமடங்காக அ[...]

# உள்ளிப்பூண்டு

(வைத்தியபூபதி)

சிறந்த மருந்துப்பொருள்களில் உள்ளிப் பூண்டு முக்கியமானது. வெணகாயத்தின் இனத்தைச்சேர்ந்த இதை உணவாகவும், மருந்தாகவும் தமிழர்கள்தொன்றுதொட்டே உபயோகித்து வந்திருக்கிறார்கள். மற்றும் நாடுகளிலும் உள்ளிப்பூண்டு சிறந்த மருந்துப் பொருளாகவே உபயோகிக்கப்படுகிறது என்பதற்குச் சான்றுகள்பலஉள. சீன தேசத்தில உள்ளிப் பூண்டு 'ஏழைகளின் கற்பூரம்' என்று ஒருபழமொழி வழங்கப்பட்டு வருவதிலிருந்து அங்கே பூண்டை நன்கு உபயோகிக்கிறார்கள் என்றுதெரிகிறது.

பூண்டில இருவகைஉண்டு. ஒன்று மலைப்பூண்டு. மற்றொன்று நாட்டுப் பூண்டு. சமநிலங்களில் பயிராவதை நாட்டுப்பூண்டு என்றும, மலைப்பிரதேசங்களில் விளைவதை மலைப்பூண்டு என்றும் கூறுகிறார்கள். நம்முடைய வீடுகளிலே பூண்டு எப்படி உபயோகிக்கப் படுகிறது? சின்னக் குழந்தைகளுக்கு வயிற்று உப்புசமோ, வயிற்றுப் போக்கோ ஏற்பட்டால் வீட்டிலுள்ள பாட்டி என்னசெய்கிறாள்? கை மருந்து தயாரிக்கிறாள். ஒற்றைப்பூண்டில் ஒருசிறு துவாரம்செய்து ஒரு வெந்தய அளவுப் பெருங்காயத்தை அதற்குள்திணித்துச் செம்மண் சேலையால் சுற்றித் தணலைச்சமமாக்கி அதனமீதுவைத்துச் சுடுவாள். ஈரமான அந்தத்துணி உலர்ந்து எரியத்தொடங்கும். அது எரிந்து அடங்கியதும் மேலுள்ள துணிச்சாம்பலைநீக்கி, மற்றொரு சுத்தமான துணியினால்துடைத்து, அம்மியில் வைத்துத் தண்ணீர் தெளித்து அரைத்து அரைஅவுன்ஸ் வெந்நீரில் கலக்கிவடிகட்டிக் குழந்தைக்குப் போடுவாள். ஒரேநாளில் குணம் தெரியும்.

பூண்டில் வைற்றமின் பி. சி. சீவசத்து அதிகமாகவும், வைற்றமின் ஏ. சீவசத்துக் குறைவாகவும் இருக்கின்றன. தவிர, இதில் அயோடின், கல்சியம், பொட்டாசியம், பொஸ்பறஸ் ஆதியன நிறைய இருக்கின்றன. வாயு, வாத சம்பந்தமான நோய்களுக்கும், வயிற்று உப்புசத்திற்கும் பூண்டு கைகண்ட மருந்து. பூண்டு சீரணத்திற்கு அத்தியாவசியமான ஜடரசங்களைப் பெருக்குவதினாலும், நீரைப்பெருக்குவதினாலும் சீரணத்தை விருத்திசெய்துஉடலை வலிமையும், வனப்பும் வாய்ந்ததாகச் செய்கிறது.

## முன்னோர்களின் அனுபவம்

வாதநோய் உள்ளவர்கள் தினந்தோறும் நான்குபூண்டுவீதம் தின்றுவர்தால் வாதம்குணமாகும். இது அனுபவத்தில்கண்ட உண்மை.

நமது முன்னோர்கள் கர்ப்பகாலம் தொடங்கிப் பிரசவித்த இரண்டுமூன்று மாதங்கள்வரையில் தினந்தோறும் ஒரு கைஉள்ளிப்பூண்டை மருந்துப்பொடியுடன் கலந்து கொடுப்பார்கள். பூண்டு சாப்பிடுவதினால் பால்ஏராளமாக உண்டாகும். சிலசமயங்களில், பசும்பாலில் பூண்டின்பருப்பை வேகவைத்து மசித்துச் சர்க்கரை, ஏலக்காய் முதலியவைகள்சேர்த்து விடியற்காலைவேளையிலே கொடுப்பார்கள். இவர்களது குழந்தைகளுக்குப் புட்டிப்பாலையோ, பசும்பாலையோ தேடவேண்டிய அவசியமே இராது

காதுக்குத்தலுக்கு உள்ளிப்பருப்பை உரித்து வால்புறமாக வைத்துக்கொண்டால் காதுவலி உடனேநீங்கும். கொஞ்சம் கடுமையான வலிக்குப் பூண்டைத் தட்டிப்போட்டு எண்ணெயில் காய்ச்சிவிடலாம். உடனே வலிகுறைவதைக் காணலாம்.

சுவாசகாசநோய், ஈளை, இருமல், இரத்தஅமுக்கம், கக்குவான இருமல் முதலியநோய்களுக்குத் தற்காலவைத்தியர்கள் பூண்டுசேர்ந்த மருந்தையே நோயாளிகளுக்குக் கொடுத்துக் குணப்படுத்துகிறார்கள். பூண்டின்சத்துதான் 'ALLISATIN' என்னும் மருந்து. இப்போது பூண்டைச் சூரணமாகவும், மாத்திரையாகவும், எண்ணெயாகவும் தயாரித்து வழங்கிவருகிறார்கள். அவற்றை ஆங்கிலவைத்தியர்கள் கையாண்டு வருகிறார்கள்.

## வைத்தியரின் அபிப்பிராயம்

பிரபல டக்றர் எஸ். பி. வைற்ஹெட், டி. எஸ். சி. என்பவர் எழுதியுள்ள "ஆரோக்கிய வாழ்வு" என்ற நூலில் குறிப்பிடுவதாவது: "நாம் ஒவ்வொருவரும் ஓர் அளவில் நமக்குநாமே வைத்தியராக இருக்கப் பழகவேண்டும். டக்றர்மாரிடம ஒவ்வொன்றுக்கும ஓடிப்போய்க்கொண்டிருக்கவேண்டாம். பூண்டைக்கொண்டே எல்லாவியாதிகளையும் சொஸ்தப்படுத்தலாம் என்று அனுபவத்தில் நான்கண்டிருக்கிறேன்.

"வாதநோயினால் அவஸ்தைப்பட்ட ஒருநோயாளியிடம் பூண்டை உபயோகிக்கச்சொன்னேன். அவருக்குப் பூண்டின்வாசனை பிடிக்கவில்லை. சாப்பிட மணம்பிடியாதஅவரிடம் பூண்டின் ஒவ்வொரு பருப்பையும் வாயில்போட்டுப் பதினைந்துநிமிஷங்கள் நன்றாகச் சப்பிவிட்டுத் துப்பிவிடும்படி சொன்னேன். அவரும் அப்படியேசெய்தார். இப்படிநாலைந்துதடவைகள் செய்வதற்கு ஒருமணிநேரம் ஆயிற்று. இப்படிச்சாப்பிட்ட அந்தவாதநோயாளி பூரணகுணமடைந்தார். இன்றே பூண்டை உபயோகித்துப்பாருங்கள்" இந்தியாவிலே மேலைக்கடற்கரைப் பிரதேசத்திலுள்ள கொங்கணியர் தமிழர்களைவிட ஆரோக்கியமாகவும், அழகாகவும், இருப்பதற்குக்காரணம், அவர்கள் அதிகமாகப் பூண்டை உபயோகிப்பது தான்.

கண்டதிப்பிலி சேர்ந்த பூண்டு ரசமும், மிளகுசேர்ந்த பூண்டுக்குழம்பும் பிரசவித்தவர்களுக்கும், நோயாளிகளுக்கும் மிகவும் ஏற்றன.

இயற்கைதந்த செல்வமாகிய பூண்டை இனியாவது எல்லாரும் உபயோகித்துப் பயனடைவோமாக!

---

● கலியாணமோதிரங்களில் பதிக்கப்பட்டிருப்பது உண்மையான வைரந்தானா என்பதை அறிந்துகொள்வதற்கு ஓர்புதியமுறை கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அந்தவைரத்தின்மீது ஐஸ்கட்டியை வைக்கும்போது கீச்என்று ஒலிகேட்டால் அதுஉண்மையானவைரமாம். கண்ணாடி, அல்லது கலவையாக இருந்தால் சத்தமே கேட்கமாட்டாதாம். டக்றர் மேரி லாவர்எனும் பிரித்தானிய பௌதிகசாஸ்திரநிபுணர் இந்த முடிவைக் கூறியிருக்கின்றார்.

● இந்தியாவிலே ஜப்பல்பூரில் பிரத்தியேக கலாசாலைஒன்றில் கல்விபயிற்றிவந்த ஆசிரியர் பி. ஏ. பரீட்சைக்குப் 17 முறைசென்று அத்தனைமுறை[...]விட்டார். என்[...]யாகமுயன்று 18-ம் முறைபோய் அரங்கேறிவிட்டார். ஆனால், அவர் அதையிட்டுச் சந்தோஷப்படவில்லை. ஏனெனில், பரீட்சை முடிவுடன் அவர்பதவிகாலமும் முடிவடைந்துவிட்டதாக உத்தரவுவரலாயிற்று.

● தென் இத்தாலியிலே "தென் ஐரோப்பாவின் ஸ்ராலின் கிராட்" என அறியப்பட்டுவந்த மார்சேதுஸா நகர் மேயரும், நகரசபை அங்கத்தவர்கள் சகலரும் கம்யூனிஸ்த கட்சியிலிருந்து ஒருங்கே இராசினாமாச்செய்து கிறீஸ்தவ சனநாயக கட்சியில்சேர மனுப்பண்ணியிருக்கின்றார்கள். இவர்களின் நன்மாதிரிகையை அதேபகுதியிலுள்ள பெற்றிலியா, பொலிகாஸ்ரோநகரசபைகளும விரைவிலே பின்பற்றுமென எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### இத்தாலியஅரசும் கம்யூனிஸ்தரும்

இத்தாலியிலே அரசாங்க உத்தியோக பதவிகளிலிருந்து கம்யூனிஸ்தர்கள் நீக்கப்பட்டு வருவதாக இத்தாலிய அரசினிடமாய் இருந்துவருகின்ற அமெரிக்கஐக்கியதேசஸ்தானீகரான ஸ்ரீமதி பூத் லூயிஸ் வாஷிங்ரன் நகரிலே தெரிவித்திருக்கின்ருர். யுத்தமுடிவிலே கம்யூனிஸ்தர்கள் கைப்பற்றிக்கொண்ட பகிரங்கமனைகள், அவற்றின் நிலங்களையும், பாசிஸ்தகட்சிக்குச் சேர்ந்தகட்டடங்கள், அவற்றின் நிலங்களையும். கை விட்டுவெளியேறும்படி இத்தாலிய அரசாங்கம் அவர்களைப் பலவந்தஞ்செய்து வருகின்றது. அபவாதங்கள், பழிதூற்றுதல்கள் சம்பந்தமான சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்று கம்யூனிஸ்தபத்திரிகைகள் நிர்ப்பந்தஞ்செய்யப் படுகின்றன.

### கத்தோலிக்கரான எஸ்கிமோவர்

வடஅமெரிக்காவிலே தூரமான வடதுருவத்தையடுத்த பகுதிகளில்வசிக்கிற எஸ்கிமோ சாதியினருள் ஒவ்வோர் 100 பேருக்கும் 15 பேர்வரையில் கத்தோலிக்கராவர். வடமேற்குப் பகுதியிலும், குவெபெக்கிலும், லபிறடோர்பகுதிகளிலும் வசிக்கின்ற 9,733 எஸ்கிமோவருள் 1,390 பேர் கத்தோலிக்கராவர். இந்தவிபரங்களை வெளியிட்டுள்ள அமலோற்பவ மரியநாயகி சபைக் குருமார் அப்பகுதிகளில் 150 மிஷன்களை, அதாவதுபுதுவேத நிலையங்களைக் கொண்டிருக்கின்றனர். 1912-ம் ஆண்டுதான் இவர்கள் அங்கே தொண்டாற்றத் தொடங்கினர். தற்போது வடதுருவப்பகுதிகளில் 3மேற்றிராணிமார், 51குருமார், 15 பிறதர்மார், 17 கன்னியாஸ்திரிமாருடன் கூடிய மூன்றுவிக்காரியங்கள் இருந்துவருகின்றன.

### பாப்பரசரும் துருக்கியபிரதமரும்

இம்மாதஆரம்பத்திலே பரிசுத்தபாப்பரசர் துருக்கியபிரதமர் எம். அட்னன் மெனட்கறஸ் அவர்களுக்கும், வெளிநாட்டுமந்திரியார் எம். பியவற்கொப்றுலு அவர்களுக்கும் பேட்டியளித்தபோது அவர் எவ்வளவோ சுகவிருத்தியடைந்திருக்கக் காணப்படலாயினர். இந்தப்பேட்டி இருபதுநிமிஷநேரம் நீடித்திருந்தது. பாப்பரசர் வத்திக்கான் நூல்நிலையத்திலுள்ள துருக்கிய கையெழுத்து நூலின் இருதொகுதிகளைப் பிரதமருக்கும், தமதுஞான ஆளுகையின் ஞாபகார்த்தபதக்கம் ஒவ்வொன்றை ஒவ்வொருவருக்கும் அன்பளிப்புச்செய்தார். பின்னர் மூன்றுதினங்களின்பின் அவர் பரிசுத்தஸ்தானத்தினிடமாக அனுப்பிவைக்கப்பெற்ற புதியஸ்தானீகர்கள், பிரதிநிதிகளுக்குப் பேட்டியருளத் தொடங்கினர். இவர்களில் பெருவியநாட்டு ஸ்தானீகரான செனியோர் ஆரியாஸ் ஷிறியேபர் அவர்கள் முதற்பேட்டிபெற்ருர். இவர் சென்றமார்கழியில் ரோமைநகர் போய்ச்சேர்ந்தும் பாப்பரசரின் சுகத்தாழ்வுகாரணமாகப் பேட்டி பின்போடப்பட்டு அன்றுதினமே தமது நியமனஅதிகாரப் பத்திரங்களைச் சமர்ப்பித்தார்.

### வேதசாட்சியான புரோசுவாமியார்

1927-ம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்ட மெக்சிக்க யேசுசபைக் குரவரான வண. மிகுவேல் புரோசுவாமியாருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவதற்கான ஆரம்பவிசாரணைக்குரிய ஈருந்தபத்திரங்களுக்குத் தற்போது கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது. விசாரணைக்குரிய ஆரம்ப முதற்பத்திரங்கள் 1947-ம் ஆண்டுதிருச்சடங்காசார திருச்சங்கத்தால் அங்கீகரிக்கப்படலாயின. முத்திப்பேறுபெற்றபட்டஞ் சூட்டுதற்கான மனுஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பரிசுத்த பாப்பரசர் 1952-ம் ஆண்டு அனுமதியளித்தார். வண. புரோசுவாமியார் 1891-ம் ஆண்டு மெக்சிக்கோவிலே குவாதலூப்நகரில் பிறந்து, 1925-ம் ஆண்டு பெல்ஜியத்தில் குருப்பட்டம் பெற்றுக்கொண்டு 1926-ம் ஆண்டு மெக்சிக்கோவுக்குத் திரும்பினர். அப்போது அந்நாட்டில் கொடியவேதகலாபனை நடக்கும் காலமாயிருந்தது. அந்நாட்டின் ஜனதிபதியான ஜெனறல் ஒப்றிக்கோனுக்கு மாருக நடைபெற்ற சதியொன்றில் கலந்துகொண்டாரென்ற போலிக்குற்றச்சாட்டின் பேரிலே சுவாமியார் கைதுசெய்யப்பெற்று, 1927-ம் ஆண்டு சார்த்திகை 23-ந்திகதியன்று தம்மைக்கொல்வதற்கெனச் சூழநின்றவர்களுக்கு மன்னிப்பருளும் வார்த்தைகள்கூறியதும் சுடப்பட்டார்.

### பாத்திமாவின் நீலச்சேனை

சமீபத்திலே பாத்திமாவின் நீலப்படையணியில் சேர்ந்திருப்பாருள்ஒருவர், சிக்காகோ நகரிலே ஓர் மில்தொழிலாளியாயிருந்து இளைப்பாறியவரும், ஓர் அர்ச்சியசிஷ்டவளின் சகோதரருமான திரு. ஆஞ்ஜெலோ கொறெற்றியே. தனது 12 வயதுடைய சகோதரியான மரிய கொறெற்றி கற்பைப்பாதுகாப்பதற்காகக் கொலைசெய்யப்பட்டபோது இவர் 14வயதுடைய ஓர்பையனுகவிருந்தார். 1950-ம் ஆண்டு ஆனிமாதம் பருத்த தேகக்கட்டும், வெண்மையான தலைமயிரும், 62 வயதுமுடைய ஓர்மனிதராய் இவர் தனது சகோதரிக்கு அர்ச்சியசிஷ்டபட்டஞ்சூட்டும் திருவைபவத்திற்குச் சம்பேதுருவானவர் மகாலய சதுக்கத்திலே சமுகமளித்திருந்தார். அப்போதுசென்றவருடம் காலஞ்சென்ற இவர்தாயாரான 84 வயதுடைய அசுந்தாவும், ஓர்இத்தாலிய கிராமவாசியான இவருடையசகோதரர் மரியானேவும் சமுகமாயிருந்தார்கள். திரு. ஆஞ்ஜெலோ கொறெற்றி சமீபத்திலே வாஷிங்ரன்நகரிலுள்ள நீலப்படையணியின் தலைமைஸ்தானத்துக்குச் சென்று பெயர்பதிவுசெய்து அதிற் [illegible] அதனுல் [illegible]

### மிஷனரிமாரான சீனக்குருமார்

சீனுவிலே ஹாங்கோநகரில் இருந்துவந்த அர்ச். பொனுவெந்தூரின் குருமடமானது 1949-ம் ஆண்டு சீனக்கம்யூனிஸ்தபடைகள் முன்னேறிக்கொண்டுவந்தபோது மற்ருேரிடத்துக்கு மாற்றப்படவேண்டியநிலைமை ஏற்படலாயிற்று. அதன்பேராசிரியர்களாயிருந்த பிரான்சீஸ்கன் சபை மிஷனரிமாரும், இருபது குருத்துவ மாணவர்களும் அங்கு போர்த்துக்கேயருக்குரிய மக்காவோவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அங்கேமக்காவோ மேற்றிராணியாரான ஜே. றமால்ஹோ ஆண்டவர் அவர்களுக்கென ஓர்மனையை உதவினுர். அதுமுதல் பதினன்கு சீனக் குருத்துவமாணவர்கள் அங்கே குருப்பட்டம் பெற்றிருக்கிருர்கள். இவர்களில் ஒன்பதுபேர் போர்மோசாவிலும், ஒருவர் ஹொங்கோங்கிலும், ஒருவர் வடபோர்ணியோவிலும், இருவர் றியூனியன்தீவிலும் மிஷனரிமாராகத் தொண்டாற்றிவர, மற்ருெருவர் ரோமாபுரியில் படித்துவருகின்ருர். சமீபத்தில் மேலும் பன்னிருசீனமாணவர்கள் அங்கு குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றிருக்கிருர்கள். இவர்களும் மூந்தியவர்களைப் போலவே சீனுவுக்குவெளியே ஆங்காங்கு சஞ்சரித்துவருகின்ற சீனர்கள்மத்தியில் மிஷனரியதொண்டாற்றுமாறு அனுப்பிவைக்கப்படுவார்கள்.

### நவமான அப்போஸ்தல தொண்டு

கம்யூனிஸ்தர்களால்வேதவிசுவாசம் வெகுவாகப் பங்கப்படுத்தப்பட்டு, சமயஅறிவு குன்றிப்போய் அஞ்ஞானம் தலைகாட்டியிருக்கும் பகுதிகளிலே கிறீஸ்தவவாழ்க்கையை ஊக்கப்படுத்தும்நோக்கமாக இத்தாலியிலே ஓர்நவமான அப்போஸ்தல தொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது, மூன்றுபேருக்குக் குறையாதகுருமார் அந்தந்தப்பகுதிகளில் ஓர்கூட்டமாகவாழ்ந்து சமய தொண்டு ஆற்றிவருவார்கள். இவர்கள் ஸ்தாபிக்கும் "மிஷனரிய நிலையங்கள்" அவர்களுக்கென்று கோவில்கள், குருமனைகளைக் சொந்தமாகக் கொண்டிருக்கமாட்டா. இவர்கள் அந்தந்த விடத்துப் பங்குக்குருமாருடனேயே உழைத்து வருவார்கள். இந்த நிலையங்களில் வீடமைத்தல், போக்குவரத்துவசதிபண்ணுதல், அவற்றைத்தாபரித்தல் ஆதியவற்றைப் பாப்பரசரின் [illegible]ரண ஸ்தாபனம் [illegible]துவரும்.

### பிரமாண்டமான கதிர்ப்பாத்திரம்

றையோ டி ஜனேய்ரோ நகரிலே வருகிறஆடிமாதம் நடந்தேறவிருக்கின்ற 36-வது சர்வதேச சற்பிரசாதமகாநாட்டிலே இராஆராதனை மிக விசேஷப்பட்ட ஓர் நிகழ்ச்சியாயிருக்கும். இதற்கென்று தங்கம், வெள்ளி கொண்டுசெய்து விலையேறப்பெற்ற நவரத்தினக் கற்கள் பதித்த பிரமாண்டமான ஓர் கதிர்ப்பாத்திரம் இரவுபகலாகச் செய்யப்பட்டுவருகிறது. இதைச் செய்ய 150 கிலோநிறையான தங்கமும், வெள்ளியும் உபயோகிக்கப்படும். இதிலே 28 மிலிமீற்றர்நிறைகொண்ட மாணிக்கக்கற்களும், பிறேசில்நாட்டின் 48 பெரிய இரத்தினக்கற்களும், 180 நடுத்தரமான பிறேசிலிய இரத்தினக்கற்களும், 400 நடுத்தரமான வைரரத்தினங்களும், 80 பாரிய வைரரத்தினங்களும், 200சிறிய வைரரத்தினங்களும், 500 கிரும் நிறையுள்ள ஓர் சமுத்திரவர்ணக்கல்லும் பதிக்கப்படவிருக்கின்றன.

### பிறேசில்நாட்டின் ஆயத்தம்

தென்னமெரிக்காவிலேபிறேசில் நாட்டின் தலைப்பட்டணமாகிய றையோ டி ஜனேய்ரோ நகரில் வருகிறஆடிமாதம் நடந்தேறவிருக்கின்ற சர்வதேச சற்பிரசாத மகாநாட்டிற்கான ஆயத்தங்கள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன. இதுசம்பந்தமாய் அந்நாட்டின் சற்பிரசாதவருடம் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது, அந்நகரிலுள்ள டிகாங்கிறெஸோ சதுக்கத்தில் இரவு 8 மணிக்கு அந்நகர் அதிமேற்றிராணியாரான கருதினுல் டே பரோஸ் கமாரு ஆண்டவர் நிறைவேற்றிய பெரியபாடற்பூசையின்போது எட்டுலட்சம்மக்கள் சமுகமாயிருந்தார்கள். அவர்களில் பிறெசில் நாட்டின் ஜனதிபதியான பில்ஹியோ அவர்களும், மந்திரிமாரும் அடங்கியிருந்தார்கள். றையோ டி ஜனேய்ரோநகரின் பாதுகாவலர் அர்ச். செபஸ்தியாரே.

### கருதினுலைத் துன்புறுத்தியவர்கள்

போலாந்திலே மதத்துவேஷகாரணமாகக் கருதினுல் விசின்ஸ்கிஆண்டவரையும், மற்றும்அநேக கத்தோலிக்கபிரமுகர்களையும் கைதுசெய்து, வழக்குத்தொடர்ந்து, துன்புறுத்தப் பொறுப்பாளிகளாயிருந்த தலைவர்கள் தங்களுக்குரிய சன்மானத்தைப் பெற்றுவிட்டார்கள். போலாந்தின் பயங்கரவாத பாதுகாப்புமந்திரிசபைத் தலைவர்களே இந்தச்சன்மானத்தைப் பெற்றுக்கொண்டவர்கள். இவர்களில் முன்னைநாள் பாதுகாப்பு மந்திரியான றட்கியெவிக்ஸ்என்பவரும், இவரைச்சேர்ந்த ரொசன்ஸ்கி, ரொம்கோஸ்கி, வெய்ஜின்எனும் மேலதிகாரிகள்மூவரும் தங்கள் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டதுடன் கம்யூனிஸ்த கட்சியிலிருந்து துரத்தப்பட்டும் விட்டார்கள். ஆனுல், கம்யூனிஸ்த நிர்மாண தூண்களாயிருந்த இவர்கள் இவ்விதமான பங்கம் செய்யப்பட்டதற்கான உண்மைக்காரணத்தைக் கண்டுகொள்வது கஷ்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாசிமாதம்

பொதுக்கருத்து:— தொழில் நுணுக்க முன்னேற்றம் மக்களைக் கடவுளிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து:— றொடீசியா, நியாசாலாந்து அடங்கிய மத்திய ஆபிரிக்க சமஷ்டியில் திருச்சபையின் அபிவிர்த்திக்காக வேண்டிக்கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்
1955-ம் ஆண்டு
மாசி மாதம் 24-ந் திகதி

## பங்குனி மாதம்

"அழியாத செல்வத்தையுடைய ஆண்டவனே! கடலாற் சூழப்பெற்ற இப் பூவுலகமுதல் யாவற்றையும் ஓர் வார்த்தையினுல் முற்காலத்தில் உண்டாக்கினுய்;

"மோயீசன் கையிலுள்ள பயன் அமைந்த ஓர்சிறிய பிரம்பினுல் நீர்மயமான செங்கடலைப் பிரித்து, இசிறவேலர் நடந்து செல்லும்படி வழியைஉண்டாக்கினுய்;

"பெரிய சதுரங்க சேனைகளையுடைய யோசுவன் எனும் அரசனது ஏவலினுல் எப்பொழுதும் வானத்தில் நில்லாமற் செலலும சூரியனை ஒருபகல் முழுவதும் அஸ்தமியாமல் வானத்தின் நடுவே நிறுத்தினுய்;

"இவ்வல்லமைகள் போன்ற உன்வல்லமையினுல் இப்பொழுதும் இப்பூவுலகத்தார் வாழும்படியாய் உன்தயையாகிய பெருங்கடலைக் கடக்கும்படி உனது அடியானுகிய என்னை (சூசையப்பர்) நீ துணையாகத் தெரிந்துகொண்டாய்." 'தேம்பாவணி'யிலே 'ஐயநீங்கு' படலத்தில் "பாராழி யுரைகொண்டே...." என்று தொடங்கும் செய்யுளின் பொழிப்பு இதுவாகும்.

அதாவது மனுக்குலத்தை இரட்சிப்பதற்காக ஆண்டவன் மனிதனுகத் திருஅவதாரஞ் செய்து உலகில் வந்தபோது கைத்தாதையாகவிருந்து அப்பரமநாதனை அன்போடுவளர்ப்பதற்குத் தெரிந்து கொள்ளப்பெற்ற சஞ்சூசைமாதவர் தமது ஐயம்நீங்குமாறு வானவன் கூறிய மொழிகளைக் கேட்டதே உலகில் மற்றெந்த மானிடரையும்நாடாது இந்த மகோன்னத பணியை நிறைவேற்றிவைக்க அடிமையாகிய என்னைத் துணையாகக் கொண்டாயேயென்று ஆச்சரியவசத்தராய்க் கூறுகின்ருர். ஆமாம், தேவசுதனின் திருக்கைத்தாதையாகவும், அதனுல் தேவதாயாரின் விரத்த பத்தாவாகவும் தெரியப்பெற்ற போதே அவரின் மகிமைப்பிரதாபத்தைப்பற்றி நாம் எடுத்துக்கூறவும் வேண்டுமா?

அர்ச். சூசையப்பர் தாவீதரசனின் கோத்திரத்தில் உதித்தவர். தேவதூதன் முதன்முதலாக அவருக்குத் தோன்றிய போது, அவரைத் "தாவீதன் குமாரன்"என்று அழைக்கிருர். அவர் பிதாப்பிதாக்களின் பிரகாசமென அறியப்படுகிருர். ஏனெனில், அவர் ஆபிரகாமைப்போல விசுவாசமும், கீழ்ப்படிதலுமுள்ளவராய், யாக்கோபைப்போலப் பொறுமைசாலியாய், எகிப்தின் யோசேப்பைப்போல் பரிசுத்தமும், கற்பும் உடையவராய், தாவீதரசனைப் போலச் சர்வேசுரனின் இருதயத்துக்கு மிகவும்உகந்தவராய், சலமோனைப்போலச் சிறந்த ஞானியாய் விளங்குகின்ருர். பரிசுத்தசுவிசேஷத்தில் அவருடையநாமம் முதன்முதலாகத் தோன்றும் பொழுதே அவர் "நீதிமான்" என்று அழைக்கப்படுகிருர்.

அர்ச். சூசையப்பர் கன்னிசுத்த தேவதாயாரைத் திருமணஞ் செய்தமையால் அவர் பெற்ற சலாக்கியமும், பாக்கியமும் என்ன? தேவதாயாரோடும், திவ்வியயேசுவோடும் அந்நியோன்னியமாய்ச் சீவிக்கும் பாக்கியம்பெற்ருர். திருக்குடும்பத்தின் தலைவரென்றமட்டிலே அவர்கள் தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கும சலாக்கியம் பெற்ருர். தேவசுதன் திருக்குழந்தையாகப்பிறந்தபோது அவரது தெய்வீக, மனுஷீகத்தின் அழகு சௌந்தரியத்தையும், திவ்விய மாட்சியையும் காணும்பாக்கியம் பெற்ருர். தேவ குழந்தைக்கு யேசுஎன்னும் திருநாமம்சூட்டும் சலாக்கியம்பெற்ருர். சகல சீவராசிகளையும் போஷிக்கிறவரையும், அவர் திருத்தாயாரையும் போஷிக்கும்பாக்கியம்பெற்ருர். அவர்களால் தந்தையென்றும், திருப்பத்தாவென்றும் அன்பாக அழைக்கப்படும் சலாக்கியம் பெற்ருர். அவர்களுடைய திருக்கரங்களிலே பாக்கியமாக மரணிக்கும் பாக்கியத்தைப் பெற்ருர்.

சுவிசேஷமே இம்மகாமுனிவரை நீதிமானென்று கொண்டாடும்போது — மூவுலகேந்துகிறவரை அவர்பூவுலகில் ஏந்தியிருக்கும்போது—பரலோக, பூலோக அரசியே அவரது திருப்பத்தினியாய் இருக்கும்போது.—திருக்குடும்பத்துக்கே அவர்தலைவராய் இருக்கும்போது—திருச்சபையே அவரைத் தனதுபாதுகாவலராகக் கொண்டிருக்கும் போது—நன்மரண தாதாவாய் அவர்திகழும்போது அவரதுமகிமைப்பிரதாபத்துக்கு இன்னுமே அத்தாட்சிகள்வேண்டுமா? ஆகவே, இந்தமாதவமுனிவரின் வணக்கமாதமாகிய பங்குனி மாதம் வருவதையிட்டு நாமெல்லாம் அகமகிழ்வோம்! சூசைமாமுனியைத் - தோத்தரித்தற்கேற்ற • மாதமாம் பங்குனி இதோ - வந்ததின்பமாக என்று ஆனந்தம்கொள்வோம்! வாசப் பூச்செண்டோடு - வர்த்திவகை சாத்தி - நேசகீதத்தால் அவரை - நித்தம் துதிப்போம்! அவரது தவருத அடைக்கலத்தை நாடுவோம்! அவரின்வணக்கமாதத்தைப் பயபக்தியாய்க் கொண்டாடி நமக்குவேண்டிய இகபர நன்மைகளையெல்லாம் இரந்து மன்ருடி அடைந்துகொள்வோம்! அர்ச். சூசையப்பரின் அடைக்கலநிழலில் அமர்ந்திருக்கும்போது நமக்குத்தான் அச்சம்ஏது? அபாயம்ஏது? ஆகுலம்ஏது? அவசியம்ஏது? என்று துணிந்து சொல்லக்கூடிய வகையிலே அவரைப் பக்திசெய்து, அவர்பாதுகாவலைஎன்றுந்தேடுவோம்!

## சகல சமயங்களுக்கும் சமஉரிமை

கிறீஸ்துவநாடுகளிலே புத்த சமயத்தைப் பிரசாரஞ் செய்யவேண்டும்; அவற்றின் தலைநகரங்களிலே புத்த விகாரைகள், புத்தகோவில்கள் கட்டவேண்டும்; அந்நாடுகளிலும் புத்தசமயம் பரந்துவர வேண்டுமென்றெல்லாம் காலந்தோறும் இலங்கைப்புத்தர்கள் கிளர்ச்சிசெய்து திட்டம வகுக்கின்ருர்கள். ஆனல், இலங்கையிலே எங்காவது ஓர் இடத்தில் கிறீஸ்துவ கோவில்ஒன்றைப் புதிதாகக் கட்டமுனைந்தாலோ அம்மம்ம! குடிமுழுகிவிட்டதாக நினைந்து எதிர்நடவடிக்கை எடுத்துக் குரோத மனப்பான்மை காண்பிக்கின்ருர்கள். கிறீஸ்துவ கோவில்கள் கட்டப்படுவது, கிறீஸ்தவர்கள் அவற்றிலே கிறீஸ்துவ சமயவழிபாடு நடத்துவதற்கேயன்றி மற்றப்படி புத்தர்களும், மற்றும்பிறசமயத்தவர்களும் அவற்றில் கிறீஸ்துவ சமயவழிபாடு நடத்துவதற்கன்று.

ஓர்கிராமத்தில், அன்றேல் புதியதோர் குடியேற்றதலத்தில் ஒருதொகையான கிறீஸ்துவர்கள்இருந்தால்—அவர்கள் தூரமானகோவில்களுக்குப்போவது கஷ்டமாயிருந்தால் — தாங்கள் வசிக்கும் இடங்களில்தானே கோவில்களைக் கட்டமுயற்சிப்பதும், கட்டுவதும் இயற்கையன்ருே! அவ்வாறு கோவில்களைக் கட்டுவதுஏன்? வீம்புக்கும், வீணபெருமைக்குமா? இல்லை. கடவுள் வழிபாடு செய்வதற்கேயாம். அவ்வாருயின் அவர்கள் கோவில்களைக் கட்டாது எதிரிடை செய்வது, அவர்கள் கடவுளை வழிபடாது எதிரிடைசெய்வதாகுமன்ருே! இலங்கையிலே புத்தசமயிகள் வசிக்கும் பகுதிகளில் கிறீஸ்துவர்கள் தங்கள்வசதியை முன்னிட்டுக் கோவில்கள் கட்டமுயன்ருல், பெரும் ஆட்சேபனைகள் எழுப்பப்படுகின்றன. மும்முரமான எதிர்ப்புகள் எழுகின்றன. கைகலக்கும் நிலைமைகளும் ஏற்படுகின்றன. இவற்றிற்கெல்லாம் காரணம்என்ன? ஓர் சுதந்திரநாட்டிலே கிறீஸ்துவர்கள் சுதந்திரமாகக் கோவில்களைக்கட்டிச் சமயவழிபாடுநடத்தக் கூடாதென்பதா?

நிற்க, பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்களின் தொகுதியான தொடங்கஸ்லந்தையிலே கும்புக்காவெலஎனும் ஓர் கிராமம்உள்ளது. அங்கு ரோமான்கத்தோலிக்க கிறீஸ்தவர்கள் ஓர்கோவில்கட்ட முயன்ருர்கள். அப்போது அக்கிராமவாசிகளானபுத்தர்கள் அக்கோவிலைக் கட்டுவதைத் தடைசெய்யுமாறுகேட்டுப் பிரதமருக்கு ஓர் விண்ணப்பம் சமர்ப்பித்தார்கள். அதற்குப்பிரதமர் அளித்த பதில் பெரிதும்பாராட்டத்தக்கது. அதன் சுருக்கம் வருமாறு: "நான் பிரதமராக இருக்கும்வரை இலங்கையிலுள்ள எந்தச் சமயத்தையும் அடக்கியொடுக்குவதற்கோ, அல்லது ஒருசமயத்தை அழித்துவிட்டு மற்ருெருசமயத்தை வளரச்செய்வதற்கோ இடமளிக்கவேமாட்டேன். இது ஒருசுதந்திரநாடு. இங்குவாழும் எல்லாமக்களுக்கும் இதுசொந்தமானது. எல்லாச் சாதியாருக்கும் இங்கு சமஉரிமையும், சம அந்தஸ்தும் உண்டு. பௌத்த சமயத்துக்கு மாத்திரமன்றி, ஏனைய சமயங்களுக்கும நான் பாதுகாவலன். அரசாங்கத்தின் தலையீட்டினுலோ, அல்லது பலாத்காரத்தினுலோ இவ்விதம் ஏனையசமயங்களை அடக்கியொடுக்க நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன். உங்கள்பகுதியில் கத்தோலிக்க கிறீஸ்தவர்கள் கோவிலகட்டுவதை நீங்கள் தடுக்கவிரும்பினுல் அவாகளுடனேயே அதைப்பற்றிப்பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். கிறீஸதுவநாடுகளின் தலைநகரங்களில் நாம்விகாரைகள் கட்டியிருக்கிருேம். ஜேர்மனியில் புத்தஆலயம்ஒன்றுகட்டத் திட்டம்வகுத்துவருகினருேம். இந்த நிலைமையில் கிறீஸ்துவர்கள் கோவில்கட்டுவதை இந்தநாட்டில் நாம் எப்படித்தடைசெய்ய முடியும்?" என்பதே.

இதுவிஷயமாய்ப் பாமரபுத்த மக்களில் பழிசுமத்துவது தகாத செயலாகும். ஆனல், திரைமறைவில்நின்று அவர்களைக் கைநட்டிவிட்டுக கூத்துப்பார்க்கிறவர்களிலேயே நாம பழி சுமத்தவேண்டும். குற்றம் பாரிக்கவேண்டும். சிலஇடங்களில் கம்யூனிஸ்தர்களும் தூண்டிவிட்டுக கருமம்பார்ப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது. ஆமாம், ஊர்இரண்டுபட்டால் கூத்தாடிக்குத் தாயமன்ருே! சுதந்திரம் பெற்ற நாட்டில் சமயவழிபாட்டுச் சுதந்திரமிருந்தால், கிறீஸ்தவர்களும் தமக்குத் தேவைப்படுமிடங்களில் கோவில்கள்கட்டுஞ் சுதந்திரமும் இருக்கத்தானே வேண்டும். கிறீஸ்தவர்கள் அதிகமாகவசிக்கும் பகுதிகளிலே புத்தவிகாரைகள் கட்டும்போது கிறீஸ்தவர்கள் ஏதும் ஆட்சேபனை செய்கின்ருர்களா? நீர்கொழும்பிலே சமீபத்தில் நிகழ்ந்த சம்பவம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகமாட்டாதா?

## தபம்என்ருல் பயமா?

தபம் என்றவுடனே உங்களுக்குப் பயம்வருகிறதா? கசையடிகளும், மயிர்ச்சட்டையும், ஒருநேரச் சாப்பாடும்என்ற எண்ணந்தான் உண்டாகிறதா? இந்த எண்ணம் பயத்தை உண்டுபண்ணுவது சகசம்.

தபம் இன்றி இரட்சணியம் இல்லை என்பது எமதுஇரட்சகரின் வாக்கு. ஆகையால் தபஞ் செய்வது அவசியம். என் செய்வோம்?

மேற்கூறியவைகளை விட வேறு தபமுயற்சிகளும் உண்டு. தேவ கட்டளைகளை அனுசரிப்பதில் நமக்கிருக்கும் கஷ்டங்களை மேற்கொள்வது இன்றியமையாதது. அவைகளை மேற்கோண்டு அவற்றை அனுசரித்துவருவது தபம்.

செபஞ்செய்வதில் நாம் சோம்பேறிகளாகிருேம், சோர்ந்து போகிருேம். சுறுசுறுப்பாய் இருப்பது தபம்.

திருப்பலி பூசையைப் போல் தேவனுக்கு உகந்த ஆராதனை வேறில்லை. திறமான காணிக்கை இல்லை. ஆகையால், நா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாந்தம் திருப்பலியை ஒப்புக் கொடுப்பது தேவதோத்திரத்துக்கும், ஆத்துமஈடேற்றத்துக் குமுரியது. இந்தத் தபசுகாலத்தில் தினப் பூசைப்பத்தியை இடையிடில்லாமல் அனுசரிப்பது தபம்.

பலியில் பூரணமாய்ப் பங்கெடுக்கும்படி நன்மைஉட்கொள்ள வேண்டும். எப்போதும் நன்மை உட்கொள்ளக் கூடியதில்லை பாத்தில் ஆத்தும பரிசுத்தத்துடன் இருப்பது உத்தமதபம்.

நாம் நடப்பதற்கு இரண்டு கால்கள் தேவை. ஆத்தும இரட்சணியத்துக்குத் தேவநேசமும், பிறர்நேசமும் அவசியமான இரண்டுகால்கள். பிறருக்கு நம்மால் இயன்ற உதவி புரிந்து, அவர்களுடைய கடுஞ்சொல் முதலியவைகளைப் பாராட்டாமல் பண்ணாமல், எல்லோருக்கும் உதவிபுரிந்து சந்தோஷத்தை உண்டு பண்ணுவது தபம்.

பராக்குகளை விலக்கி இடையிடையே சர்வேசுரனை நினைத்துச் சிறுசெபங்களை மனதாற் சொல்லுவது தபம்.

பாருங்கள் தபம் இலகுவாக இருக்கிறது. இனி அச்சமில்லை.

## குடும்பசெபமாலைப் படையணி
## விசேஷ இதழ்

"குடும்ப செபமாலைப் படையணி" இயக்கத்தின் பிரஸ்தாபம் வாய்ந்த ஞானத்தளகர்த்தரான வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமியவர்கள் இலங்கையிலே தொடக்கிவிட்டுப் போயிருக்கும் குடும்ப செபமாலைப் படையணி இயக்கத்தின் ஞாபகார்த்தமாக அவர் இங்கேநடத்திய மகாநாடுகளின் விபரங்களுடன் "பாதுகாவலன்" இவ்வார இதழைக் "குடும்பசெபமாலைப் படையணி விசேஷஇதழ்" ஆக வெளியிட விருந்தோம். ஆனால், வண. பெய்ற்றன்சுவாமியவர்கள் இவ் விசேஷஇதழுக்கு அனுப்புவதாகத் தெரிவித்துப் போயிருக்கும் செய்தி இன்னும்வந்து சேராமையாலே விசேஷஇதழ் வெளியிடுவது பின்போடப் பட்டுள்ளது.

பாலைதீவு

### அர்ச். அந்தோனியார் திருநாள்

தபசுகாலத்தின் 3-ம் ஞாயிறு

கொர்டியேற்றம் 7-3-55
சுற்றுப்பிரகாரமும் வேஸ்பரும் 12-3-55
திருநாட்பூசை 13-3-55.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவின் அனுக்கிரகத்தினுல் எனதுகுழந்தைக்கு உண்டான கொடியசுரம்நீங்கி நற்சுகம்கிடைத்தது. இன்னும் பூரணசுகம்கிடைக்க அவவின்கிருபையை இரந்து நிற்கின்றேன். நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கின்றேன்.

தாழ்வுபாடு மாதாவின் அடியான்

### நன்றியறிந்த "ஸ்தோத்திரம்

திருக்குடும்பத்தின் இரக்கத்தாலும், சதாசகாயமாதாவின் வேண்டுதலாலும் சூசையப்பருடைய மன்ருட்டினுலும் நாங்கள் கேட்டகாரியங்கள் அனுகூலமானதினுல் நன்றியறிந்த தோத்திரமாக நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன். சதாசகாயமாதாவுடைய நாமம்எங்கும்புகழப் படுவதாக.

ம. இராக்கினியம்மா

ஊறணி.



குடும்ப செபமாலைப் படையணி இயக்கத்தின் தலைவரான வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமியவர்கள் தமது நண்பர்கள் மத்தியில் அமர்ந்து அவர்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கின்ருர்.




# சதாசகாயமாதா கோணம்

## சதாசகாயமாதா பத்திமுயற்சி

சதாசகாயமாதாவின் நோவனைப் பத்திமுயற்சியானது நாம் தேவதாயாரின் சீவியத்தையும், அவ அனுசரித்த புண்ணியங்களையும் நன்குஅறிவதற்கு ஏதுவாகவிளங்கவேண்டும். சிநேகத்துக்கும், ஆசைக்கும், பற்றுதலுக்கும் இருக்கவேண்டிய அவசியமான ஒரு குணம், ஒருவரைப்பற்றிய அல்லது ஒரு பொருளைப்பற்றிய அறிவுமுதிர்ச்சி என்பது நாம்அறிந்த ஒருஉண்மை. தேவமாதாவைப்பற்றிய அறிவுவளர்ச்சியானது அவமட்டில் நாம்கொண்டுள்ள நேசத்தை அதிகரிப்பிக்க உதவியாகும். சதாசகாயமாதா பத்திமுயற்சியின் அடிப்படையானநோக்கம் யாதெனில், அவமட்டில் நமக்குள்ள பத்திவணக்கத்தை விருத்தியாக்குவதாகும்.

ஏதும்சலுகையைக் கேட்டடைவதற்கு ஒருவழியாகமாத்திரம் இந்த நோவனைப்பத்திமுயற்சியை உபயோகப்படுத்துவோமாஞல் அது சுயநலன்கருதும் உதவாக்கிரியையாக மதிக்கப்படத்தக்கதேயன்றி மற்றப்படியல்ல, முதன்முதலாகத் தேவதாயாரைக் கனப்படுத்தவும், பூசித்துநமஸ்கரிக்கவும் உதவியாகும் ஒருஉந்நத பத்திமுயற்சியாக நாம் இதைக்கணிக்க வேண்டும், எங்கள்அன்பையும், நேசத்தையும் புதுப்பிக்கும் ஒருஞான அப்பியாசமாகக் கருதவேண்டும். இந்தஅன்பும், நேசமும் எங்களை யேசுநாதரிடங் கொண்டு செல்வதற்கு உகந்தவழியாகும். எங்கள்நேசத்தையும், அன்பையும் முற்ருய்த் தமதுடையதாக்க- ஒருவகையில் அபகரித்துக்கொள்ள விரும்புபவ அல்ல, நம்தேவதாயார். தமதுஅன்பான திருக்குமாரனை நா[illegible] தற்கு ஒரு[illegible] பாவிப்ப தற்கே தம்மைநேசித்துப் பூசித்து வணங்கவேண்டுமென அவவிரும்புகிறு. தம்மூலம் யேசுவிடம்போவதுதான உகந்தவழிஎன்பது சுகம்மிலும்பார்க்க அவவுக்கு நன்ருகத்தெரியும். தேவதாயை நேசியாமல். தேவகுமாரனைநேசிப்பது முற்றிலும் முடியாதஓர்காரியம். தேவசுதனே தமதுதாயாரை நமக்குத்தந்து நாம்அவவைச் சங்கிக்கவேண்டுமென விதித்திருக்கிருர். யேசுவின் தாய் மனுக்குலத்தின்தாய். எனவே, அவவைப்பத்திசெய்வதும், வணங்குவதும் நமதுகடமை.

விசுவாசிகளும், விசுவாசிகள்அல்லாதோரும் இந்தப்பத்திமுயற்சியை வாரந்தோறும் தவருது அனுசரித்துவர அவர்களைஅருட்டித் தூண்டிவிடுகிற முகாந்தரம்என்ன ? இதில் பங்குபற்றுவதற்காக எத்தனையோபேர் பலவித தியாகங்களைச்செய்ய நேரிடக்கூடும். அவற்றின்பேறுகளை நாம் சிறுகடுகளவேனும் இழந்துவிடாதபடி எங்கள் கருத்துத் தவறில்லாததாக இருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டியது நமது கடன். நாம் என்னகருத்துடன் இந்த ஆராதனைகளிற் பங்குபற்றுகிறேமென ஒவ்வொருவருந் தன்னைத் தானே ஆராய்வாக வினவவேண்டும்.

முதலாவதாக: தேவதாயாரின் சேவையிலும், நேசத்திலும், ஞானத்திலும் நாம்வளர்ச்சியடைய வேண்டுமென்ற சுத்தகருத்து இருக்கவேண்டும். கிறீஸ்துநாதர் அவ்வைஎவ்விதம் நேசித்துச் சங்கித்தாரோ அதுபோல நாமும் அவவை நேசித்துச் சங்கிக்க உண்மையாகப் பிரயாசப்படவேண்டும். மரியாயின்மட்டில் நமக்குள்ள நேசம் கிறீஸ்துநேசமாக இருக்க வேண்டும்.

இரண்டாவதாக: யேசுவிடம் போகும்பாதை மரியாயே. ஆகையால், யேசுவிடம் நம்மைச் செல்லவிடாது தடையாயிருக்கும்எந்தக்கிரிகையையும் சதாசகாயமாதாவின் உதவியோடு எம்மாலான பிரயாசைஎடுத்து விலக்க வேண்டும்.

மூன்றுவதாக: யேசுவிடம்போவதென்ருல் எல்லாத்தையும்விட அவரை நேசிக்கப் பிரயாசப்படுதல் என்பதுதான் கருத்து. "என்னில் வாசம் பண்ணுங்கள்" என்கிருர் யேசுநாதர். நேசத்தினுலன்றி அவரில் வாசம்பண்ணுவது எப்படி ? யேசுநாதரை நேசிப்பதென்ருல் என்ன ? அவருடைய திருச்சித்தத்துக்கமைய நம் சீவியத்தை நடத்துவதன்றி மற்றப்படி அல்ல.

இந்த நல்நோக்கங்களுடன் சதாசகாயமாதாவின் நோவனை ஆராதனைகளிற் பங்குபற்றுகிறேனு ? இந்தப் பத்திமுயற்சி திவ்வியயேசுவுக்குச் சமீபமாக என்னைக் கொண்டுவந்திருக்கிறதா ? அவரின்நேசம் என்னில் அதிகரித்திருக்கிறதா ? அவரின் திருச்சித்தத்துக்கு நான் அமைந்து நடக்கிறேனு ? என்சீவியம் முன்னையிலும்பார்க்கத திருத்தமடைந் தி[illegible]க்கிறதா ? பாவத்தையும், பாவச்சமயங்களையும் விலக்க என்னுல் ஆனபிரயாசைப்பட்டு மன்ருடுகிறேனு ? தேவமகிமைக்காகவும், திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் பிரயாசபபட்டு உழைக்கிறேனு ? ஒரேவார்த்தையிற் சொல்லவேண்டுமானுல் உத்தமகத்தோலிக்கனுகச் சீவிக்கிறேனு? இக்கேள்விகளை நம்மனக் கண்முன்வைத்து நன்மையடையத்தக்கவகையில் நடந்து கொள்வோமானுல் சதாசகாயமாதாவின் ஒத்தாசை நமக்குக் கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

### இந்தியாவுக்குப் புதியகடற்பாதை

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே புதியகடற்பாதைஒன்றைத் திறப்பதற்கான பாரியதிட்டம ஒன்று தயாரிக்கப்படுகிறது. இதிலே ஈடுபட்டுள்ளவர்கள் தபால்-வானெலி மந்திரியார் திரு. எஸ் நடேசன் அவர்களும், போக்குவரத்து மந்திரியார் திரு. மொண்டேகு ஜயவிக்கிரம அவர்களுமே. அங்கீகாரத்துக்காக இத்திட்டத்தை மந்திரிசபைமுன் சமர்ப்பிக்க இவ்விருவரும் ஏற்கனவே சம்மதித்துள்ளனர். இந்[illegible]க்கடற்பாதை காங்கேசன்துறையையும், தஞ்சாவூரிலுள்ள வேதாரணியத்தையும அந்தங்களாகக் கொண்டிருக்கும். பலநியாயங்களையுமிட்டு இந்தப்புதிய பாதையைத் திறக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவின் இறங்குதுறையான தனுஸ்கோடியைக் கடல்அரித்துக்கொண்டு போவதால் அதனை வேறிடத்திக்கு மாற்ற இந்திய அரசாங்கம் நெடுங்காலமாக ஆலோசித்துவருகின்றது. மண்டபம் தொழில்முகாமை மூடி விடவும் அதுவிரும்புகிறது. இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே பிரயாணஞ்செய்ய இலங்கைப் பக்கத்தில் புதிய "குவாறன்ரைன்" முகாம் ஒன்று அமைக்கப்படவேண்டியிருக்கின்றது. காங்கேசன்துறைக்கும், வேதாரணியத்துக்கும் இடைப்பட்டதூரம் ஏறக்குறைய 25 மைலாகும. தற்போதையகடற்பாதையும் ஏறக்குறைய இதேதூரமுள்ளதாகும். புதியகடற்பாதையைத் திறப்பதற்கான முதற்படி, காங்கேசன்துறைத் துறைமுகத்தைத் திருத்திவளப்படுத்தவதே. இதற்கெனப்போக்குவரத்துமந்திரியார் மந்திரிசபையிலே உபமான்யங்கோரச் சம்மதித்திருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அண்ணா சொல்லுவது:

அருமைச் சகோதரங்களே!

வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமியைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இமாத நடுக்கூற்றில் அவர் கொழும்பு, கண்டி, நுவரெலி ஆதியஇடங்களைத் தரிசித்துச் செபமாலைப் படையை அணிவகுத்து விட்டுச் சென்றிருக்கிறார்.

பெய்ற்றன் சுவாமியார் எங்களுக்கு என்னசெய்தி சொல்ல வந்தாரோ?

குடும்பங்கள் குலைந்து போகின்றன. குடும்பத்தை ஒன்றுபடுத்துவதற்கு அத்திவாரமான கடவுள் விசுவாசம் குறைந்து போவதே அதற்குக் காரணம். உலகம் சீர்பெற வேண்டுமென்றால்—சமாதானம் நிறைய வேண்டுமென்றால் குடும்பம் உறுதிபெற வேண்டும்.

அதற்குக் குடும்பத்தவர்கள் தேவஉதவியை நாடிச் செபஞ் செய்யவேண்டும். செபமாலையைக் குடும்ப சகிதமாய்ச் செபிக்க வேண்டும். தேவதாய் எங்களில் மிகவும் கரிசனையுள்ளவ. எங்கள் நித்திய வாழ்வில் தேவஅன்னைக்கு அதிக ஆவல். ஆகையால், நாம் அவவை வாழ்த்தி, அவவைப்போல் யேசுவை நேசிப்பதற்கு அவதாமே எமக்குத் தந்த செபமாலையைப் பத்தியாய்ச் செபிக்க வேண்டும்.

தேவதாய்க்கும், செபமாலைக்கும் நேர்மைத் தன்மையைக் காண்பியுங்கள்.

தேவதாயும், செபமாலையும் எமக்கு அவசியமென்று மனதில் உறுதிகொள்ளுங்கள்.

தேவதாயையும் செபமாலையையும் பிரமாணிக்சமாய் நேசியுங்கள்.

சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணா.

## தபசுகாலத்தின் 1-ம் ஞாயிறு

### நிருபம்: 2 கோரி 1-10;

தபசுகாலம் சர்வேசுரன் தமது வரங்களை அள்ளி இறைக்குங் காலம். எமது பாவங்களுக்கு மன்னிப்புத் தேடவேண்டிய அருமையான காலம். ஆகையால், சர்வேசுரன் கிறீஸ்துநாதர்மூலம் எமக்குத்தரும் இரட்சணியத்தை "விருதாவாய்ப் பெறுதேயுங்கள்" என்று சம்பாவிலு நம்மை எச்சரிப்பது இயல்பு.

"இது அனுக்கிரக காலம், இரட்சணியநாள்." இதை நாம் வீணாய்க் கழியாமல் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதற்குச் சம்பாவிலு என்ன செய்கிறார்? பிறருக்கு இடறலாயிராமல் நாங்கள் பிரமாணிக்கமுள்ள தேவஊழியர் என்று பிறர் தெரிந்துகொள்ளும் பொருட்டு "மிகுந்த பொறுமையிலும், துன்பங்களிலும், இக்கட்டுகளிலும், நெருக்கிடைகளிலும்" என்று தாம்படுகிற சகல வேதனைகளையும் எடுத்துக் கூறுகிறார். "கற்பிலும், கல்வியிலும், நீடிய சாந்தத்திலும், இனிமையிலும், இஸ்பிரீத்து சாந்தவிலும், பாசாங்கற்ற நேசத்திலும்" தம்மை நல்லூழியனாகக் காட்டுகிறார்

"வலத்திலே, இடத்திலே நீதியின் ஆயுதங்களைக் கொண்டிருப்பது" என்பதன் கருத்து என்னவெனில், செழுமையிலும், வறுமையிலும் நீதியைக் கடைப்பிடிக்கிறோம; செழுமையான காலத்தில் தாழ்மையும், மட்டுத்தன்மையும் அனுசரிக்கவேண்டும்; வறுமையான காலத்தில் பொறுமையும், திடமும் காணப்பட வேண்டும்என்பதே.

"செத்தவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், அடிபட்டாலும் கொல்லப் படாதவர்களாகவும்" கருதப்படுகிறார்கள். ஏனெனில், தேவாதீனமாகக் காப்பாற்றப் படுகிறார்கள்.

"ஒன்றும் இல்லாதவர்களாய் எண்ணப்பட்டாலும் சகலமும் உடையவர்கள்." ஏனெனில், சர்வேசுரன் தமது தாசர்களைக் கைவிடுவதில்லை.

மேற்கூறியவைகளை எடுத்துரைத்ததில் சத்தியவேத ஊழியரான குருமாரின் இலட்சணங்களைக்கூறி, அவையில்லாத பொய்ப்போதகரை அறிந்து கொள்ளும் வழியையும் காட்டுகிறார்.

— சர்வேசுரனுக்குத் தோத்திரம்.

மணி: கடிகாரம் பதின்மூன்றடிக்கும்போது என்ன வேளையாயிருக்கும்?

கிட்டு: அதைத் திருத்துவிக்க வேண்டிய வேளையாயிருக்கும்.

## பிறர்க்குதவு

'ஜெயம்'

சந்திரன் நிலவைத் தருகிறதே
சூரியன் ஒளியைத் தருகிறதே
இந்தரை உயிர்கள் வாழ்ந்திடவே
எங்கும் காற்று நிறைகிறதே.

•

வானம் மழையைப் பொழிகிறதே
வாசனையும் மலர் தருகிறதே
தேனும் தேனீ தருவதுபார்
தெரிந்தே பிறர்க்கு உதவிடுவாய்.

•

மரம், கனி, நிழலைத் தருகிறதே
மாங்குயில் இசையைத் தருகிறதே
நிரம்பிய அறிவு படைத்தவன் நீ
நிதமும் பிறர்க்கு உதவிடுவாய்.

## திருப்பலி

பூசைப்பலி தொடங்குவதற்காகக் குருவானவர் ஆயத்த அறையிலிருந்து பீடத்திற்கு வருகிறார். முற்காலத்திலே குருவானவரும், (மேற்றிராணியாரும்) சீஷரும் கோவிலுக்கு ஆடம்பரமாகச் செல்வார்கள். கோவிலுக்குள் பிரவேசிக்கும்பொழுது பாடகர் வேதாகமத்திலிருந்து சில வாக்கியங்களை இசையாய்ப் பாடுவார்கள். அவைகள் அதிகநேரம் பாடத்தக்க பெரிய சங்கீதமாயிருக்கும். இக்காலத்தில் அது சிறிது.

ஆகையால், இப்பகுதி பிரவேசம் என்று அழைக்கப் படுகிறது. உங்கள் பூசைப் புத்தகத்தைப் பார்த்தால் ஒவ்வொருநாட் பூசைக்கும் வெவ்வேறு பிரவேசவாக்கியம் இருப்பதைக் காண்பீர்கள். பூசையின் விசேஷ பாகங்களில் இதுவும் ஒன்று.

பீடத்திற்கு ஏறி இந்தப் பிரவேச வாக்கியத்தை வாசிக்குமுன் — அதாவது குருவானவர் பீடப் படிகளில் ஏறும்பொழுது சிலசெபங்கள் சொல்லுகிறார். பீடத்திற்குநடுவில் வந்ததும் பீடமேசையின் விளிம்பை முத்திசெய்கிறார்.

பீடமேசையைப் பூசைவேளை ஒன்பதுமுறை குருவானவர் முத்திசெய்வதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, பீடமேசையின் நடுவில் சிலவேதசாட்சிகளின் திருப்பண்டங்கள் (மீதிகள்) வைத்து மூடப்பட்டிருக்கின்றன. இன்னொருகாரணம் என்னவென்றால், பீடமேசை கிறீஸ்துநாதரைக் குறிக்கும். கிறீஸ்துநாதருக்குச் சங்கையாகப் பீடத்தை முத்தமிடுகிறார் குருவானவர்.

அதன்மேல் பீடத்தின் வலப்பக்கஞ் சென்று சிலுவை யடையாளம் வரைந்து பிரவேசவாக்கியத்தை வாசிக்கிறார். அவ்வாக்கியங்களில் ஒன்றை அவதானித்துப் பார்ப்போம். தபசுகாலத்தின் முதலாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கும் பிரவேசவாக்கியம் பின்வருமாறு:

அவன் நம்மை நோக்கி அபயமிடுவான். நாம் அவன் மன்றாட்டைக் கேட்போம். அவனைத் தப்புவித்து அவனைக் கனப்படுத்துவோம். அவனைத் தீர்க்காயுளால் நிரப்புவோம். உன்னதமானவருடைய அடைக்கலத்தில் குடிகொண்டிருப்பவன் பரமண்டலத்தின் தேவனுடைய பாதுகாவலில் நிலைபெற்றிருப்பான். பிதாவுக்கும் சுதனுக்கும்....

இது 90-ம் சங்கீதத்திலிருந்து எடுக்கப்பட்டது. சர்வேசுரன் கூறுவதாக இதைச் சங்கீதராசா கூறுகிறார்.

நாம் சர்வேசுரனை நோக்கி அபயமிட்டால் (அவனுடன் செபித்தால்) அவர் எமது மன்றாட்டைக் கேட்பார்.

எமக்கு வரக்கூடிய ஆபத்துகளில் நின்று சர்வேசுரன் நம்மை இரட்சிப்பார். பாவத்தின் நிமித்தம் நாம் அழிவுக்குரியவர்களாயிருந்தாலும் மனந்திரும்பினால்—தீயவழிகளை விட்டுவிலகினால் எமக்கு அவர் நித்திய சீவியத்தைக் (தீர்க்காயுள்) கட்டளையிடுவார். ஆகையால், நாம் சர்வேசுரனைச் சரணடைய வேண்டும். அப்பொழுது அவருடைய பாதுகாவல் எமக்குக் கிடைக்கும.

தபசுகாலத் தொடக்கத்தில் பாவிகளாகிய எமக்கு நமபிக்கையை யூட்டும் வசனங்கள் இவை. மனந்திரும்ப வேண்டியநாம் எமது பாவங்களையிட்டு மன்னிப்புக் கிடைக்குமோ என்று அவநம்பிக்கை கொள்ளாமல் நம்பிக்கையுடன் நாம் ஆண்டவரை நோக்கி அபயமிடுவோம். செபத்தினாலும், தபத்தினாலும் ஆவரை நோக்கிச் செல்வோம்.

## ஏன் 5 சதம் குறைகிறது?

எனது தகப்பன் எனக்கும், எனது தம்பிக்கும் 50 தேங்காய்கள் விற்கும்படி தந்தார். நான் 25 தேங்காய்களை எடுத்தேன். தம்பியும் 25 தேங்காய்களை எடுத்தான். நான் பெரியகடைக்குக் கொண்டுபோய் 25 தேங்காய்களையும் 6 சதத்துக்கு 2 தேங்காய்வீதம் விற்றேன்.

எனது தம்பி சின்னக்கடைக்குக் கொண்டுபோய் 6 சதத்துக்கு 3 தேங்காயாக விற்றான்.

நாங்கள் இருவரும் 50 தேங்காய்களையும் எவ்வளவு காசுக்கு விற்றிருப்போம்? (A)

நானும் என்தம்பியும் விற்ற காசைக் கொண்டுபோய்த் தகப்பனிடம் கொடுத்தோம். அவர் எங்களைச சோதிப்பதற்கோ, என்னமோ தெரியவில்லை. வேறும் 50 தேங்காய்கள் தந்து அவற்றையும் கொண்டுபோய் ஒருகடையில் வைத்து விற்றுக்கொண்டுவாருங்கள்; ஆனால், அவைகளைச் சில்லறைக்கு விற்காமல் மொத்தமாகக் கொடுங்கள் என்று சொன்னார்.

நானும், தம்பியும் 50 தேங்காய்களையும் அவர்சொன்னபடி ஒருகடையில் வைத்திருந்தோம். அங்கு ஒரு செட்டி வந்தார். அவர் 12 சதத்துக்கு 5 தேங்காயாகக் கேட்டார். நாங்கள் கொடுத்தோம்.

12 சதத்துக்கு 5 தேங்காய்ப்படி 50 தேங்காய்களின் விலையும்என்ன? (B)

இந்தக் கேள்வியைத்தான் கேட்கிறேன். சில்லறையாக விற்றபொழுது ஏன் 5 சதம் கூடவேண்டும்? மொத்தமாக விற்றபொழுது ஏன் 5 சதம் குறையவேண்டும்?

அ. அல்போன்ஸ் சீராய்வா
நல்லாயன் ஆண்பாடசாலை, மன்னார்.

## பிந்திக் கிடைத்தவை

10-2-54-இல் வெளியான 'காவல'னில் கொடுபட்டிருந்த கணிதப்பகுதிக்கு அநேகரின் விடைகள் பிந்திக்கிடைத்தனவாதலால் சரியானவிடைகள் அனுப்பியவர்களின் நாமங்கள் சென்றவாரக் காவலனில் இடம்பெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுச் சுடர்

❊ தங்கள் வேதத்துக்காகச் சிறைவாசஞ்செய்வோரும், அறியப்படாத இடங்களுக்கு நாடுகடத்தப்பட்டோரும், தங்கள் ஞானஅதிகார கடமைகளை நிறைவேற்றாது தடுத்துவைக்கப் பட்டவர்களுமாய் உலகில் தற்போது கருதினல்மார், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாராய் எத்தனை பேர் இருந்துவருகின்றார்கள்?

ஏறக்குறைய 150 பேர் இருந்துவருகின்றார்கள்.

❊ உலகில் எங்காவது கடல்மட்டத்துக்குமேலே 12,000 அடி உயரத்திலுள்ள நீர்ப்பாகத்தில் கடற்பிரயாணக் கப்பல்கள் பிரயாணஞ் செய்கின்றனவா?

ஆம், தென்னமெரிக்காவிலே பொலிவியா, பெருஎனும் நாடுகள் இரண்டிற்குமிடையிலுள்ள அந்தீஸ்மலையில் அமைந்துள்ள ரிற்றிக்காஎனும் வாவியில் கடற்பிரயாணக் கப்பல்கள் பிரயாணஞ்செய்து வருகின்றன. இந்தவாவியே கப்பல்கள் பிரயாணஞ் செய்யக் கூடியதாய் உலகில் அதிகம் உயர்ந்தமான பகுதியில் அமைந்துள்ள நீர்ப்பாகமாகும். இந்தக் கப்பல்கள் ஸ்கொத்லாந்தில் கட்டப்பட்டு, பின்னர் பெருநாட்டைச்சேர்ந்த மொலெண்டோ துறைமுகத்துக்குக் கப்பலில் ஏற்றிக்கொண்டு போகப்பட்டு, அங்கிருந்து பகுதி பகுதியாகப் பிரித்து அந்தீஸ்மலைகொண்டு போய்ச் சேர்க்கப்பட்டுப் பின்னர் பொருத்தி வாவியில் மிதக்கவிடப் படுகின்றன.

❊ உலகில் அதிகம் விநோதமானதென்று சொல்லப்படும் பறவையாது?

நியூசிலாந்தில் மட்டும் சஞ்சரிப்பதான கிவிஎன்ற பட்சியே. இது மூளை சிறகுகளையே உடையது. இறகுகளுக்குப்பதில் மயிரைக் கொண்டிருக்கிறது. ஓர்பூனையைப்போல மியா மியாஎன்று கத்துகிறது. நாயைப்போல உறுமுகிறது. நிலத்தின்கீழ் தனது கூட்டைக் கட்டிக்கொள்ளுகிறது. கோழிக்குஞ்சுகளிலும் அதிகம்சிறியதான பெண்கிவிப் பறவை ஐந்துஅங்குல நீளமும், தனது நிறையில் காற்பங்கு நிறையுள்ளதுமான முட்டைகளை இடுகிறது.

❊ சிறுபிள்ளைகளின் பாதுகாவலர்கள் யார்?

அர்ச். சூசையப்பர் (திருநாள் பங்குனி 19), ஆர்மான்கோ அர்ச். இராயப்பர் (சித்திரை 27), அர்ச். அகாபித்துஸ் (ஆவணி 18), அர்ச். கலாசாங்க்தியுஸ் யோசேப் (ஆவணி 27), அர்ச். ஜிலெஸ் (புரட்டாசி 1).

❊ பொதுவாகப் பிள்ளைகள் எல்லோரினதும் பாதுகாவலாகக் கொண்டாடப்படுகிறவர் யார்?

அர்ச். நிக்கலஸ் (மார்கழி 6).

❊ கோவிலிலே பாடகர்குழாமைச் சேர்ந்தபையன்களினதும், பாடசாலைப் பிள்ளைகளினதும் விசேஷபாதுகாவலர்கள் யார்?

அர்ச். நிக்கலஸ், அர்ச். மாசில்லாத குழந்தைகள் (மார்கழி28), அர்ச். தோமினிக் சவியோ (பங்குனி 9).

❊ பறவைகளில் அதிககாலம் உயிர் வாழக்கூடியன எவை?

அன்னம், காகம், கழுகுஎன்பனவே. இவைகள்ஒவ்வொன்றும் நூறுவருடம் உயிர்வாழக்கூடியன.

❊ உலகில் அதிககாலம் உயிர் வாழும் கடற்பிராணி எது?

திமிங்கலமே. பிடிக்கப்பட்ட சில திமிங்கலங்கள் ஆயிரம் வருடங்கள் வரை உயிர்வாழ்ந்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

❊ மிருகங்களில் அதிககாலம்உயிர் வாழக்கூடியது எது?

யானையே இது சராசரியாக நூறு வருடம் உயிர்வாழக்கூடியதாகும்.

## பறவைத் தூதர்கள்

விஞ்ஞானம திருப்திகரமாக வளர்ச்சியடைந்திருக்கும இவ்விருபதாம் நூற்றுண்டிலே செய்திகளை ஆயிரக்கணக்கானமைலுக்கு அப்பாலிருந்து நிமிஷ நேரத்திற்குள் அறிவிக்கக்கூடிய நூதனக நவிகளாகிய தெலிபோன், வானொலி, கம்பியில்லாததந்தி ஆதியன விருந்தும் பறவைகளைத் தூதர்களாக வைத்திருக்கிறார்களென்றால், வியப்பாகத்தோன்றலாம். ஆனால், கடந்த மாபெரும் உலகயுத்தங்கள் இரண்டிலும் சைனியங்களுக்கு முக்கியசமாச்சாரங்களை அறிவிப்பதற்கு யுத்தஅதிகாரிகள் பறவைகளின்உதவியை நாடினார்கள். இச்சேவைக்காகப் பயிற்சி நிலையங்களை உண்டுபண்ணிப் பறவைகளுக்குப் பயிற்சிஅளித்து வந்தார்கள். இப்பறவைகள் பிரித்தானிய கால்வாயைக்கடந்து செய்திகளைக் குறித்த இடத்தில்சேர்த்துத் தீரச்செயல்கள் புரிந்திருக்கின்றன.

முதல்யுத்தத்தின்போது பறவைச் சைனியம் திருப்திகரமாகச் சேவை செய்யவில்லைஎன்றே எல்லோரும் கருதினர். ஆனால், முதல்யுத்தம்முடிந்து பறவைச்சைனியம் கொண்டுசென்ற இரகசியதகவல்களையும், முக்கியசெய்திகளையும கணக்கிட்டபொழுது நூற்றுக்குத் 95 சதவிகிதம பாதுகாப்பாகவே குறித்தஇடங்களில் அவைகள்போய்ச் சேர்ந்திருக்கின்றன. இந்த உணமையை அறிந்தபின்தான் இரண்டாவது உலக யுத்தத்திலே மின்சாரத்தால் இயங்கும 'தூதர்கள்'பல இருந்தும், பறவைச்சைனியத்தையும் பயன்படுத்தினர்.

தரைப்படைவீரர்கள் மாத்திரமன்றிக் கடற்படைவீரர்களும் பறவைத் தூதர்களின் உதவியைநாடி நின்றிருக்கின்றனர். கடற்கரையோரங்களில் அவர்கள் பாதுகாப்பான இடங்களில் கூடங்கள்அமைத்து வைத்திருந்தார்கள். கப்பலிலிருந்து செய்திகொண்டு செல்லும் பறவைகள் அதை அங்கு கொண்டுபோய்ச சேர்க்கும். இப்படித் தூதுசென்ற பறவைகள் பல தீரச்செயல்களும் புரிந்திருக்கின்றன.

ஒருசமயம் ஒரு அமெரிக்ககப்பல் எதிரியின்கப்பலால் தாக்கப்பட்டது. அந்தக்கப்பலிலிருந்த 'பைல்ட்லக்'என்னும்பறவை சுமார் 150 மைலுக்கப்பால் புயல்காற்றுக்குஎதிராகப் பறந்து போய்ச் செய்தியைச்சேர்த்து, அந்தக் கப்பலையும், போர்வீரர்களையும் காப்பாற்றியபெருமையை அடைந்தது. எதிரிகள் நெல்சன்என்னும் கப்பலைத் தாக்கி அதன்கப்ரினையும் படுகாயமுறச் செய்தார்கள். கப்ரின் தனது கடைசி முயற்சியாகப் பறவைத்தூதனை அனுப்பினார். அதிவேகமாகச்சென்ற பறவை செய்தியைக் கொண்டுபோய்ச் சேர்த்து 'நெல்ச'னையும் காப்பாற்றியது. இந்தப்பறவை இறந்தபொழுது இதற்கு வெள்ளைமாளிகையில் ஒரு கௌரவமான இடமளிக்கப்பட்டது.

ஜப்பானில் ஒருபறவை வெகுசாமர்த்தியமாகப் பகைவர்களிடம் சிக்கிக் கொள்ளாமல் செய்தியைக் கொண்டு போய்ச் சேர்த்ததினால் அதற்குத் தங்கப்பதக்கம் அளித்திருக்கிறார்கள். பறவைகளின் தீரச்செயல்களைக் காணத்தக்கதாக இன்னும்எத்தனையோ சின்னங்களைப் பிரித்தானிய நூதனபொருட்காட்சிச்சாலையில் வைத்திருக்கிறார்கள்.

செய்திதெரிவிப்பதற்காக யுத்தஅதிகாரிகள் புறாக்களைத்தான் அதிகமாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஏனெனில், இப்பறவைகள்தான அதிகதூரத்துக்கும்,சுட்டுவீழ்த்துவதற்குமுடியாதஉயரத்திலும் பறக்கக்கூடியன எதிரிகள் பெரியபட்சிகளைப்பழக்கிப் புறாக்களின் மீதுஏவிவிட்டுத் தாக்கச்செய்வதுமுண்டு. ஆனால், இது அதிகபலன் தரவில்லை. தானகஇயங்கும் 'கமறா வை'ப் புறாக்களின்வயிற்றில்கட்டி எதிரிகளின் நாடுகளினூடாகப் பறக்கச் செய்து படமும்பிடித்திருக்கிறார்கள்.



# பல தேசங்களில்

### அநாதபாலியனின் அதிர்ஷ்டம்

இங்கிலாந்திலே நோர்தாம்ரன நகரில் ஜோன்எனும் அநாத பாலியன் எதிர்பாராதவிதமாய்ப் பெரும்அதிர்ஷ்டசாலி யாகியிருக்கின்றான். இற்றைக்கு ஆறுவருடங்களின்முன் இவன் பிறந்ததும இவனுடைய பெற்றாரின் விவாகம குலைந்துபோயிற்று. அதனால் இவன் ஓர்குழந்தையாகவே அங்குள்ள ஓர்அநாதசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டான். ஆனால், சமீபத்தில வெளியான மரணசாதனம்ஒனறில் இவனுக்கு 40,000 பவுண் விடப்பட்டுள்ள செய்தியானது எவர்க்கும் ஆச்சரியந் தருவதாயிற்று. ஆனால், இந்தப் பணம் இவன் 21 வயதாகிறவரையில தர்மகர்த்தாவின் பொறுப்பிலே இருந்துவரும். அப்போது முதலும் வட்டியுஞ்சேர்ந்து 60,000 பவுணுகிவிடும். லண்டன் பண்டகசாலை ஒனறினதும், மதுவடிக்குஞ்சாலைஒன்றினதும் தலைவராயிருந்த 80 வயதுடைய திரு. றிச்சேட் மிக்கேல் என்பவர் எழுதிவைத்துள்ள மரணசாதனப்பங்கில் இது ஓர் பகுதியாகும். தற்போது ஆறுவயதுப் பாலியனான ஜோண திரு. மிக்கேலினதும், அவர்பாரியாரினதும் சுவீகாரப் புதல்வனுவன். சென்றவருடம் பங்குனிமாதம இவர்மரிக்குமுன் எழுதிய மாணசாதனத்தில் அவருடையசொத்தில் பெரும்பகுதி இவனுக்கே விடப்பட்டிருக்கிறது.

### புராதன கல்லறைப் புதையல்

கி. மு. 300-ம் ஆண்டுக்கும், 400-ம் ஆண்டுக்கு மிடைப்பட்ட காலத்தில் இறந்தஓா சிதியன்சாதிச்சீமாட்டியின் கல்லறைஒன்றை உக்ரேனிய புதைபொருள்ஆராய்ச்சியாளர்கண்டுபிடித்திருக்கின்றனர். இவளுடைய பிரேதத்துடன் சுமார் 3,500 தங்கச் சில்லறை ஆபரணங்கள் இருக்கக் கண்டறியப்பட்டன. இவற்றிலே புறோச்சுகள், பென்டன்கள், ஓர்சிங்கம்—ஓர்புலியின் பிரதிமைகள், ஓர் தேனீ, அத்தீன் எனும் தேவதையின் தலைஎன்பனவும், காதணிகளும், ஓர்முத்திரை மோதிரமும், கழுத்திற்கோத்துக்கட்டும் மணிகளும் அடங்கியிருந்தன. உக்ரேனிய விஞ்ஞானசாஸ்திரகழகத்தின் ஆராய்ச்சிக்கோஷ்டிஒன்றே அசோவ்கடலிலிருந்து ஒன்பதுமைல்தூரத்திலுள்ள மெலிற்றொப்போல் எனுமிடத்தில் இந்தக் கல்லறையைக் கண்டுபிடித்தது. இது தவிர, சிதியன்சாதியாரின் அரசவம்சத்தைச்சேர்ந்த மற்றோர் கல்லறையுடன் அதன்பக்கமாகக் கடிவாளமிட்டுக் கலணை அமைத்த இருகுதிரைகளின் எலும்புக்கூடுகளுள்ள வேறுவேறான குழிகளும்கண்டறியப்பட்டன. பிரேத அடக்கத்தின்போது வெட்டிப் பலியிடப்பட்டதாகச் சொல்லப்படும் ஓர் பிள்ளையின் எலும்புக்கூடும் அங்கு காணப்பட்டதாம்.

### பிரபல போலிஷ்நடிகர்

போலாந்தின் பிரபலநடிகரான சோல்ஸ்கிஅவர்கள் இறந்தபோது அவருக்குப் போலிஷ் கம்யூனிஸ்தஅரசாங்கம் தனது செலவில் ஆடம்பரமான அடக்கச்சடங்குகள் நடத்த ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தது. அவர் சடலம் நாடகசாலையில் வளர்த்தப்பெற்று, கம்யூனிஸ்தர்கள் சாரிசாரியாகச் சென்று அதற்கு மரியாதைசெலுத்தினார்கள். ஆனால், திடீரென ஒருசெய்தி வந்தது. 'சோல்ஸ்கியின் சடலத்திற்குச் தேசிய அடக்கச்சடங்குகள் நடத்துவதுஎன்றதிட்டம் கைவிடப்பட்டது' என்பதே அச்செய்தியாகும். அவர் இறப்பதற்குமுன் ஒருகுருவானவரை [illegible] கேட்டுக்கொண்[illegible] காட்டந்தரும் இச்செய்தி உண்மைதானுவென்று போலாந்த அரசாங்கம் விசாரித்தபோது அது உண்மைதானுமென்று தெரியவந்தது. உடனே தேசியஅடக்கத்திட்டம் நிறுத்தப்பட்டது. சோல்ஸ்கிஅவர்கள் ஒருகுருவானவரை வரவழைத்துப் பாவசங்கீர்த்தனஞ்செய்து, கடைசித் தேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுக்கொண்டதுமன்றித் தமக்குக் கிறீஸ்தவ அடக்கம அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளலாயினர்.

### பாட்டி அடைந்த வெற்றி

பிரித்தானியதேசத்தில் பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாய் இருந்துவருகிறவரான ஓ'ஹரா ஆண்டவர் சென்ற தைமாதம 14-ந் திகதியன்று லண்டன்நகரில் காற்றேனியன் சங்கமெனப்படும் பிரபல கத்தோலிக்க சங்கத்தின் விருந்தாடியாகச் சமுகமளித்துப் பேசியபோது பின்வருமசம்பவத்தை எடுத்துக்கூறினர். "அமெரிக்க ஐக்கியதேசத்திலே புரொட்டஸ்தாந்த பாதிரியார்ஒருவர் தினமும் பூசைகாணச்செல்லும் வயோதிகபாட்டி ஒருத்தியை எப்போதும் கவனித்து வரும் வழக்கமுடையவராய் இருந்தார். கத்தோலிக்ககோவில் செங்குத்தான ஓர்குன்றின்உச்சியில் இருந்தது. ஓர் நாள் பனிக்கட்டியும், பனியும் வீதியில் எவரையும் ஏறிச்செல்லமுடியாத நிலைமைக்குள்ளாக்கிவிட்டன. அன்றைய சுகாத்தியமாற்றம் பூசைக்குச் செல்ல விடாது பாட்டியைத் தோற்கடித்துவிடும், அவள் இன்று வரமாட்டாளென்று நினைத்தவராய்ப் பாதிரியார் அவளைவழிபார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் பாட்டியோ முழந்தாளையும், கைகளையும் ஊன்றிப் பெருங் கஷ்டபிரயாசத்துடன் தவழ்ந்து தவழ்ந்து கோவில்போய்ச்சேர்ந்தாள். தற்போது இந்தப் பாதிரியாரும், அவர் குடும்பத்தினரும் கத்தோலிக்கராய் இருக்கின்றார்கள்."

### திரைமறைவிலே........?

எட்டிப்பழத்தின் தோற்றத்தையும், செழுமையையும், நிறத்தையும்காட்டி எவ்வளவுதான் வர்ணித்தாலும் வாயில் வைத்தவுடனே தெரிந்துவிடாதா, இது குடலைப்புரட்டும் கசப்பு—உயிரைவாட்டும் நஞ்சுஎன்று? அதுபோல, இன்பத்தேனாறு ஓடுகிறது, சமதர்மம் சல்லாபப்பாடுகிறது, பூலோக சொர்க்கம் பூத்துக்குலுங்குகிறது என்றெல்லாம் வர்ணிக்கப்படும் கம்யூனிஸ்தநாடாகிய சோவியற் ருஷியாவிலே மேற்கூறிய நிலைதான் நிலவுகிறது என்பதைக் கீழ்க்காணும் நிகழ்ச்சி ருசுப்படுத்துகிறது. 1953-ம் ஆண்டு பங்குனிமாதம் கம்யூனிஸ்தர்களின் ஒப்பற்ற தலைவர்என்று போற்றப்படும் ஸ்ராலின் இறந்தபிறகு 24 மணி நேரத்துள் பிரதமராக மலங்கோவ் ஆக்கப்பட்டார். இவர் பதவி ஏற்றபிறகு பலகுத்துவெட்டுகள், சுட்டுத்தள்ளுதல்கள் எல்லாம்நடந்ததை உலகம் அறியும். தற்பொழுது மலங்கோவ் திடீரெனஇராசிநாமாச் செய்துவிட்டார். காரணம் என்னதெரியுமா? குறைந்த வயதாம் (53)! அரசியலில் அதிக அனுபவமில்லையாம்! முற்றிய அரசியல்ஞானிகள் நிறைந்த சோவியற் கம்யூனிஸ்தகட்சி சென்றஆண்டில் எப்படி இத்தகையஒருவரை அரங்கேற்றியது? இதெல்லாம் திரைமறைவிலுள்ள திட்டங்கள். இராசிநாமாவைச் சட்டசபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டு, இதுவரை இராணுவமந்திரியாயிருந்த புல்கானின்என்பவரை ருஷிய பிரதமராக அனுவதித்துள்ளது. இவருக்குப்பலியாக யார்யார் கசாப்புச் சிறைகளில் தயாராகப்போகிறார்களோ அதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைப் புதிய அத்தியட்சர்

## "ரோமான் கத்தோலிக்க சபையுடன் நாம் ஐக்கியமாவதற்கு ........"

முன்பு சென்னைவேப்பரி சென்ற் போல்ஸ் ஹைஸ்கூல் தலைவராயிருந்த கனம் டேவிட் செல்லப்பா அவர்கள் சென்ற தைமாதம் 25-ந் திகதியன்று சென்னைப்பிஷப்(அத்தியட்சர்) பதவியேற்றார். 'தென்னிந்திய திருச்சபை' The Church of South India என்றபெயருடன் புதிதாகநிறுவப்பெற்றுள்ள புரொட்டஸ்தாந்த சபையின் பதினான்கு பகுதிகளில் சென்னைப்பகுதியும் ஒன்று. இப்பகுதியின் முதல்இந்திய பிஷப் பாகிய கனம். டேவிட் செல்லப்பா அவர்களுக்கு 'இந்திய கிறீஸ்தவசங்கம்' இந்த மாசிமாதம் 10-ந் திகதியன்று தேநீர் விருந்தளித்து உபசரித்தபோது, அவர் இந்திய கிறீஸ்தவ சமுகத்தினரின் சிந்தனையைக் கிளறத்தக்க பலவிஷயங்களைக்குறிப்பிட்டார். அவற்றில் சிலவற்றை ஈண்டு பெயர்த்து எழுதுகிறோம்:

கிறீஸ்துவம் ஒவ்வோர்நாட்டினதும் தேசியஉணர்ச்சியோடு இயைந்து செல்லுவதேயாகும். ஆயினும், அதே சமயத்தில் அது சர்வதேச ஸ்தாபனமுமாய் இருக்கிறது எனவே, கிறீஸ்துவம் ஏககாலத்தில் தேசிய அமைப்புடையதாகவும், சர்வதேச அமைப்புடையதாகவும் இருக்கிறது. சிலவருடங்களுக்குமுன் நமக்குக்கவலையளிப்பதாயிருந்த பிரச்சினை என்னவெனில், இந்தியகிறீஸ்தவர்களிடம் போதியஅளவுக்குத் தேசியஅமைப்பு இல்லையென்ற குற்றச்சாட்டுக்கு இடம் இருக்குமோ என்பதே. இன்றைக்கோவெனில், நமக்குக் கவலையளிக்கும் பிரச்சினை என்னவென்றால், சர்வதேச அமைப்பாயிருக்கமுடியாத அளவிற்கு அவ்வளவு தூரம் நமது கிறீஸ்துவம் தேசியமயமாகிவிடுமோஎன்பதே. ஓரளவிற்குச் சர்வதேச மயமாயில்லாத ஒரு கிறீஸ்துவ சமுகம் உண்மையில் கிறீஸ்துவ சமுகமாய் இருத்தல்கூடாது.

நான் இதை ஏன் குறிப்பிடுகிறேனென்றால், நம்நாட்டில் கிறீஸ்துவின் அலுவலை நடத்தும்பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டிய காலம் வந்திருக்கிறது. அந்நியநாட்டு மிஷனரிமார்களிலே நமக்காக எதார்த்தமாகவும், மிகவுயர்ந்த எண்ணங்களுடனும் உழைப்பவர்களைக்கூடப் புறமத்தவர்களான நமதுசகோதரர்கள் சமுசயக் கண்ணுடன் பார்க்கின்றனர் என்று கருதவேண்டியிருக்கிறது. இப்படி நான் சொல்லுகையில, அந்நியநாட்டு மிஷனரிமார்களின் சேவையோ, அவர்களுடைய பொருளுதவியோ உடனடியாக விலக்கப்பட வேண்டும் என்று சொல்ல விரும்புவதாக நினைத்துவிட வேண்டாம். அத்தகைய ஒருநிலை ஏற்பட்டால் அது கிறீஸ்துவசமூகத்திற்கு மட்டுமன்று, நாட்டிற்குமே நஷ்டம் விளைக்கும்.

எனவே, நான்உங்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் என்னவெனில், நமக்குள் இன்னுமதிக ஒற்றுமையிருக்க வேண்டும் என்பதே. தற்பொழுது பலதரப்பட்ட ஸ்தாபனங்களைச்சேர்ந்தவர்களும், தனி நபர்களும் கிறீஸ்துவ சேவை நடத்திவருகின்றனர். இதனால் சிலசமயங்களில் ஒருகோஷ்டிநடத்தும் வேலையையே மற்றொரு கோஷ்டியும் நடத்தும்நிலைமை ஏற்படுகிறது.

இவ்விஷய சம்பந்தமாகப் பேசுகையில் மாபெரும் ஸ்தாபனமாகிய் ரோமான்திருச்சபையின் ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும், அச்சபையின் அங்கத்தினர்கள் தங்கள் தாய்ச்சபையின்பால் காட்டிவரும் பிரமாணிக்கத்தையும் நாம்வியந்து பாராட்டாமலிருக்க முடியாது. புரொட்டஸ்தாந்தர்களாகியநாம் இவ்விஷயத்தில் ரோமான் சபையினரைக் கண்டுபாவிக்க வேண்டும். ரோமான் கத்தோலிக்க சபையுடன் நாமஐக்கியமாவதற்கு வழிவகைகள் காணுவலதப்பற்றியும நாம இருதயபூர்வமாகச் சிந்தனைசெய்யவேண்டும.

ஒரு பதினைந்து வருடங்களுக்குமுன் புரொட்டஸ்தாந்தர்களிடையே தென்னிந்திய ஐக்கியசபையென ஒன்று உருவாகுமென எவரேனும் கருதியிருக்கக் கூடுமா? இதோ நாம் இப்பொழுது ஒரேசபையாக இணைந்துள்ளோம். அவ்வாறே ரோமான்கத்தோலிக்கசபையுடன் இணைவதற்கு வழிகண்டுபிடிப்பதும் பொருத்தமுடையதேயாகும்.

---

# பிரியாவிடை வைபவம்

கொழும்புத்துறைத் தாபன தலைவராகக் கடந்த பதினேழு ஆண்டுகளாகக் கடமையாற்றித் தற்போது பதவிமாறிச் சென்றுள்ள வண. எல். ஏ. சிங்கராயர் சுவாமியவர்களுக்குச் சென்ற 19-ந் திகதி சனிக்கிழமைபிற்பகல் கொழும்புத்துறைப் பழையமாணவர்சங்க ஆதரவில் ஓர்பிரியாவிடைவைபவம் அர்ச். சூசையப்பர்ஆச்சக முன்மைதானத்தில் அதிவிமரிசையாக நடந்தேறியது. ஸ்ரீலங்காவின் நாலா திசைகளிலும் பணிபுரிகின்ற பெருந்தொகையான ஆசிரியர்கள்சமுகமளித்துக் குரவர் அவர்களின் குணநலன்களைப் பாராட்டி அளவளாவினர். மாலைக்கதிரோனின் மஞ்சள்நிறஒளி பொன்னேபோல் பொலிந்துநிற்க, மாலைசேர்கரத்தினராய் மக்கள்குழுமிநிற்க, தாபன புதிய தலைவருடன் வந்துசேர்ந்தார் பழைய தலைவர். மாலையிட்டு வரவேற்று, மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தரின்கண் அவரை அழைத்துச் சென்று அமரச்செய்தனர்.

பொதுமுகாமைக்காரர் வண. மதுரநாயகம்சுவாமியவர்களும், மற்றும்பல குருப்பிரசாதிகளும், லட்டாரவித்தியாதரிசி திரு. இமமனுவல் அவர்களும், மற்றும்பல பெரியார்களும் சபையை அலங்கரிக்க, பரிமேலர் எஸ். அருளானந்தம்அவர்கள் வைபவத்துக்குத் தலைமைதாங்கிப் பேசியவிடத்து: பிரியாவிடைநாயகர் தமது பழைய மாணவரென்றும், அன்பு, இரக்கம், கடமையுணர்ச்சி மிகவுமஉடையவரென்றும், அவர் மாணவராக இருந்த காலத்திலே மிகவும் சிலர்கிக்கத்தக்க அறிவாற்றல்படைத்து விளங்கினரென்றும், பதினேழுவருடகாலமாக அவர் கொழும்புத்துறைத்தாபனத்தை ஓர் உயர்ந்தநிலைக்குக் கொண்டுவர அரிதேபாடுபட் டுழைத்தாரென்றும், இன்று ஸ்ரீலங்காவில் பணிபுரிகின்ற ஐந்நூற்றுக்குமேற்பட்ட ஆசிரியதிலகங்களே அவரது சகலபண்புகளுக்கும், கல்வித்திறனுக்கும சாட்சிகளாயுள்ளனரென்றும் கூறிநின்றார்.

அவரைத்தொடர்ந்து வித்துவான் வேதநாயகம், திருவாளர்கள் தங்கராசா, அந்தோனிப்பிள்ளை, திருமதி இம்மனுவேல் என்பவர்களும், தாபன புதியதலைவர் வண. எம். ஜே. மரியாம்பிள்ளை சுவாமியவர்களும்பேசிப் பிரியாவிடைநாயகருக்குப் புகழ்மாலைசூட்டினார்கள். ஈற்றில் பிரியாவிடைநாயகர் தமதுநன்றியைத் தெரிவித்துக் கொண்டதோடு, கல்விக்கொள்கையில் ஏற்பட்டுள்ளமாற்றங்களை விளக்கிப் பேசினார். தமிழ்ஆசிரியர்களது வருகாலநிலை உயர்ந்ததாகவிளங்குமெனக் கூறினார். குடும்பசெபமாலைப் படையணிஇயக்கத்தலைவரான வண. பெயிற்றன்சுவாமிகளுடன் சம்பாஷித்தபோது, அவர் யாழ்ப்பாணமேற்றிராசனத்தைச்சேர்ந்த குருமார், ஆசிரியர் முதலானோருக்கு மனமுவந்து தமது மூலம் அளித்தசெய்தியை விளக்கிக் கூறினார். ஈற்றில் காரியதரிசி பண்டிதர் ஆசிநாதன் அவர்கள்கூறிய நன்றியுரையோடு வைபவம்முடிவுற்றது.

—நிருபர்.

# நாளு சங்கதிகள்

● தற்போது பிறநாடுகளிலே 950 அமெரிக்காணுவ தளங்கள் இருந்துவருகின்றன என்றும, அந்நாடுகளிலே 13 லட்சத்து 70 ஆயிரம் அமெரிக்க போர்வீரர்கள் யுத்தத்துக்குத்தயாராக இருந்துவருகின்றனர் என்றும் அமெரிக்கபாதுகாப்பு மந்திரி காரியாலயம் சென்ற 15-ந் திகதி அறிவித்திருக்கின்றது. மேலும் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் 16 லட்சத்து 2 ஆயிரம் போர்வீரர் இருப்பதாகவும் அறிவிக்கப்படலாயிற்று.

● சுதந்திர தென்கோறியாவிலே சென்ற 1954-ம்ஆண்டு 14,499 பேர் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருமறையைத் தழுவியிருக்கின்றனர். தற்சமையம் 22,776 பேர் அதனைத் தழுவிக் கொள்ளும நோக்கத்துடன் வேதசத்தியங்களைப் படித்துவருகின்றார்கள்.

● மஸ்கோநகரிலே இம்மாதம்நிகழவிருக்கும் ஓர் வைத்தியமகாநாட்டுக்குச்சமுகமளிக்கும்படியாய் முதன்மைவாய்ந்த ஓர்இத்தாலிய சத்திரவைத்தியரும, தற்போது பாப்பரசருக்குச் சிகிச்சைசெய்துவரும் டக்றர்மாரில்ஒருவருமான புரொபெசர் கி லல்லைமக்கோயிர் அவர்களைச் சோவியற்அரசாங்கம் அழைத்திருக்கிறது. ஆனால், அதன் அழைப்பை அவர் நிராகரித்துவிட்டார்.

● அமெரிக்க சலவாயுக் குண்டொன்று சென்றவருடம் பசிபிக்சமுத்திரத்தில் பரிசோதனை நிமித்தமாக வெடிக்கவைக்கப்பட்டபோது, ஏழாயிரம் சதுரமைல்கொண்ட தேசப்பரப்பை அது பாதித்ததென்று அமெரிக்க அணுச்சக்திக்கம்மிஷன் சென்ற 16-ந் திகதி அறிவித்துள்ளது. சலவாயுக் குண்டு வெடிக்கும் ஒருபகுதி சனநெருக்கமுடையதாய் இருக்குமானல் உயிர்ச்சேதங்கள் பெருவாரியாகலாமென்று கம்மிஷன்தலைவர் தெரிவித்திருக்கின்றார்.

● இந்தியபிரதமர் பண்டிதநேரு அவர்கள்லண்டன்நகரிலே சாம்பிராச்சியபிரதமர்களின் மகாநாடுமுடிந்து திரும்பும்வழியிலே எகிப்தில் தங்கியிருந்தபோது, "உலகயுத்தம் ஏற்படுமென்று நான்கருதவில்லை; ஆயினும் கீழ்த்திசைநிலையைச் சர்வசாக்கிரதையுடன் சமாளிக்கவேண்டும்" எனப் பத்திரிகை நிருபர்களுக்குக் கூறலாயினர்.

● ஆபிரிக்காவில்வாழும் 19கோடியே 70 லட்சம்சனங்களில் ஏறக்குறைய 1 கோடியே 40 லட்சம்பேர்தான் கத்தோலிக்கர். ஆங்குள்ளநாடுகளில் அதிகங்கூடியவீதமாகப் பசுற்றோலாந்தில் நூற்றுக்கு 33 விகிதமானோரும், உகண்டா, பெல்ஜியகொங்கோ நாடுகளில் 25 வீதமானோரும் கத்தோலிக்கராய் இருக்கின்றார்கள்.

● இந்தியாவிலே ஆந்திரா இராச்சிய சட்டசபைத் தேர்தலிலே திருவாடேர்த்தொகுதியில் தகப்பனும், மகனுமாக இருவர் போட்டியிடுகின்றனர். தகப்பனான திரு. பெட்ல பாலையா காங்கிரஸ் அபேட்சகராகவும், இவர் மகனான திரு. இராமாால் கம்யூனிஸ்த அபேட்சகராகவும் நிற்கின்றனர். இம் மாதம் 27-ந் திகதியோடு தேர்தல்முடிவடைய விருக்கிறது.

● செவிடும் குருடுமான செல்வி ஹெலென் கெல்லர்எனும் அமெரிக்க மாது இந்தியா, பாகிஸ்தான், பர்மா, ஜப்பான், பிலிப்பைன்ஸ் ஆதியாம் நாடுகளிலே குருடர்களின் சேமலாபத்தைப்பற்றி அரசாங்க பிரதிநிதிகளுடன் கலந்துபேசி ஆலோசனைகூறுவதற்காக லண்டனிலிருந்து சென்ற சனிக்கிழமை ஆகாயவிமானத்திலே இந்தியாவுக்குப் புறப்பட்டிருக்கின்றாள். இவள் குறித்த நோக்கமாய் 40,000 மைல்தூரம் உலகசுற்றுப்பிரயாணம் செய்யவிருக்கின்றாள்.


## WANTED

Wanted Catholic lady teachers with Senior School Certificate—English—for

V/Mudaliyakulam R.C. T.M.S.

V/Alambil R.C. T.M.S.

Please apply to the General Manager, R C. Schools, Bishop's House, Jaffna.


# இலங்கை அரசாங்க புகையிரதப்பகுதி புகையிரதக் கடவைத் திருத்தங்கள்

வடபகுதி புகையிரத (Northern Line) மார்க்கத்தில், யாழ்ப்பாணம் — பளை பி. டபிள்யூ. டி. வீதியைச்சந்திக்கும், யாழ்ப்பாணம்—கொக்குவில் புகையிரதஸ்தானங்களுக்கிடையில் 245 மைலிலுள்ள புகையிரதக்கடவை திருத்தம்செய்வதற்காக 1955-ம் ஆண்டு பஙகுனிமாசம் 17-ந் திகதி மாலை 10 மணிதொடக்கம் மறுநாட் காலை 5 மணிவரைக்கும் மூடப்பட்டிருக்கும். இக்காலத்தில் வாகனங்கள் ஆஸ்பத்திரிவீதி (Hospital Street) ஸ்ரான்லி வீதி புகையிரதக்கடவை (Stanley Road Level Crossing) யாற்போக வேண்டும்.


**ஆசிரியர், 8-ம் வகுப்பு மாணவருக்கு**

ஓர் அரிய சந்தர்ப்பம்!

100 பக்கங்கொண்ட உயர்ந்தாளேசில் அச்சேறிய அறிவானநூல். 1. எண்கணிதம், 2. பாஷை, 3. பொது விவேகம் அடங்கிய 8-ம் வகுப்புத் தெரிவுப்பரீட்சை (Eighth Std. Selective Test). விலை ரூ. 2-50. புத்தக வியாபாரிகளுக்கு 25% கமிசன். தனிப்பிரதிக்கும் ஆடர்செய்யலாம்.

**வித்துவான் S. Joseph,**

St. Peter's College, Colombo.


## தென்மராட்சியும் மிளகாயும்

தென்மராட்சிப்பகுதியின் மண்வளத்தைக் கண்டறிவதற்காக நடத்தியபரிசீலனையிலிருந்து அப்பகுதிமண் மிளகாய்ப் பயிர்ச்செய்கைக்கு ஏற்றதெனத் தெரியவருகிறது. அப்பகுதி மக்கள் கமத்தொழிற்பகுதிக்கு அனுப்பிய ஓர் மனுவின்பேரில அது எழுபதினாயிரம் மிளகாய்க்கன்றுகளைக் கமக்காரருக்கு வழங்கியிருக்கிறது. பரீட்சார்த்தமாகத் தற்போதுநடைபெறும் மிளகாய்ப் பயிர்ச்செய்கை பலன்அளித்தால் அப்பகுதிமக்கள் பெருந்தொகையான மிளகாய்ச்செய்கையில் ஈடுபடுவார்களென நம்பப்படுகிறது.

## ஆங்கிலம் படிப்பிக்கும் நேரம்

இரண்டாவது கட்டாயபாடமாக ஆங்கிலத்தைப் பாடசாலைகளிலே குறைந்தபட்சம் எவ்வளவுநேரம் படிப்பிக்கவேண்டும என்பதுபற்றிக் கல்விப் பகுதி விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது வருமாறு. மூன்றாம்வகுப்பில் வாரம்ஒன்றுக்குக் குறைந்தபட்சம் ஒவ்வொன்றும் 35 நிமிஷங்கள்கொண்ட ஐந்துபீரியட்டுகளும், நான்காமவகுப்பில் வாரம்ஒன்றுக்குக் குறைந்தபட்சம ஒவ்வொன்றும் 35 நிமிஷங்கள்கொண்ட ஏழுபீரியட்டுகளும், ஐந்தாம்வகுப்பில் குறைந்தபட்சம் பத்துப்பீரியட்டுகளும ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும்என்பதே. ஆனால், உயர்தரவகுப்புகளில் எத்தனை பீரியட்டுகளுக்கு ஆங்கிலம் கற்பிக்கப்படவேண்டுமென்பதுபற்றிக் கல்வி அதிகாரிகள் இன்னமும் ஆலோசித்து வருகின்றார்கள்.

---

⁂ தந்திக்கம்பிகள் ஏன் செம்பினல் செய்யப்படுகின்றன?

செம்பு காற்றினலும், நீரினலும் சிறிதுமே தாக்கப் படுவதில்லை. இன்னும் இது மின்சாரத்தை நன்றாகக் கடத்தக்கூடிய உலோகம். அதனல் தந்திக்கம்பிகள் செம்பினல் செய்யப்படுகின்றன.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 24-1955.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org